விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 071 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 16 வெள்ளிக்கிழமை (28.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## எல்லை தாண்டாதே! எமது வளத்தை அள்ளாதே!

### இந்திய மீனவர்களைக் கண்டித்துப் போராட்டம்



இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் நேற்று கண்டனப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 03ஆம் பக்கம் பார்க்க

## வெளிநாட்டுப் பயணங்களுக்காக

# ரூ.3,572 மில்லியன் மகிந்த செலவு



(கொழும்பு)

வெளிநாட்டுப் பயணங்களுக்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 3,572 மில்லியன் ரூபாய் செலவு 15ஆம் பக்கம் பார்க்க

## சுன்னாகத்தில்

# தபால் ஊழியர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் தபால் ஊழியரான குடும்பஸ்தர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த வைத்தியலிங்கம் சுரேஷ்குமாரன் (வயது-56) என்ற குடும் 15ஆம் பக்கம் பார்க்க

# அரச வாகனங்கள் மார்ச் மாதம் ஏலம்

(கொழும்பு)

அதிக பராமரிப்புச் செலவுகளைக் கொண்ட அமைச்சுகளுக்குச் சொந்தமான வாகனங்களை மார்ச் மாதத்தில் ஏலத்தில் விடத் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிற்கும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் இடை 15ஆம் பக்கம் பார்க்க

# மக்கள் அனைத்துக்கும் கேள்வி கேட்கிறார்கள்

## சிறந்த நிர்வாகத்தை அரசால் மட்டும் முன்னெடுக்க முடியாது - அமைச்சர் பிமல்

(கொழும்பு)

நாட்டு மக்கள் இன்று அனைத்துக்கும் கேள்வி கேட்கிறார்கள். அரசினால் மாத்திரம் சிறந்த நிர்வாகத்தை முன்னெடுக்க முடியாது என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)



## புதிய அரசியலமைப்பின் மூலமே

# இனப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்

### சபையில் மனோ கணேசன்



(கொழும்பு)

புதிய அரசியலமைப்பொன்றின் மூலமே நாட்டில் உள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என பாராளுமன்ற உறுப் 15ஆம் பக்கம் பார்க்க

## யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட

# வடக்கில் நல்லிணக்கத்தை வளர்ப்பதற்குத் திட்டம்

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கில் நல்லிணக்கத்தை வளர்ப்பதற்குத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். 02ஆம் பக்கம் பார்க்க

## மரணச்சடங்கு ஒன்றில்

# வன்முறையில் ஈடுபட்ட 3 இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

மரணச்சடங்கு ஒன்றில் வன்முறையில் ஈடுபட்ட 3 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வட்டுக்கோட்டை தெற்குப் பகுதியில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

# ஜப்பானுக்கு விஜயம் செய்க

## ஜனாதிபதிக்கு அழைப்பு

(கொழும்பு)

ஜப்பானுக்கு விஜயம்செய்யுமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு, ஜப்பான் அதிகாரபூர்வமாக அழைப்பு 15ஆம் பக்கம் பார்க்க

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால்

# யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று எதிர்ப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)


யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகத்துக்கு எதிராக நேற்று (27) அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அமைதியான முறையில் தமது எதிர்ப்பு நடவடிக்கையை வெளிப்படுத்தியது.

இதேவேளை யாழ்.போதனா வைத்தியசாலையின் முக்கிய கிசிச்சைப் பிரிவுகளும் குறித்த எதிர்ப்பு நடவடிக்கைக்கு ஆதரவளிக் 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வரர் பட்டினப் பிரவேசம்




பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான, தெட்சண கைலாயம் எனப் போற்றப்படும் தேவாரப் பாடல் பெற்ற தலமும் இலங்கை வேந்தன் இராவணன் துதித்துய்த தலமுமான திருக்கோணேஸ்வர ஆலயத்தின் பட்டினப்பிர வேசம் நேற்று மாலை ஆரம்பமானது.

கோணநாதப் பெருமான் சோமஸ்கந்தராக கைலை வாகனந்தனில் மஹா கணபதி, மாதுமையம்பாள் சகிதம் பக்தர்களுக்கு இன்னருள் நல்கும் பொருட்டு மலைவிட்டிறங்கி வந்து தொடர்ச்சியாக ஐந்து நாட்கள் திருகோமலை நகரில் பவனி வந்து அருள்பாலிக்கவுள்ளார்.

அதன் பிரகாரம் இரண்டாம் நாளான இன்று கோணேஸ்வரரது நகர் வலமானது மாலை 5.30 மணிக்கு அன்புவழிபுரம் தில்லையம்பலப் பிள்ளை யாரது ஆலயத்திலிருந்து உவர்மலை கண்ணகி அம்மன் ஆலயம் வரை இடம்பெறவுள்ளது. (ம-7)

# அரசின் பொருளாதார திட்டத்திற்கு ஆதரவு

## ஜனாதிபதியிடம் இத்தாலித் தூதுவர்



(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டத்துக்கு ஆதரவு தருவதாக இத்தாலித் தூதுவர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும் இலங்கைக்கான இத்தாலித் தூதுவர் டெமியானோ பிரான் கோவிக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று (27) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கைக்கும் இத்தாலிக்கும் இடையிலான தற்போதைய இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில், இலங்கையின் புதிய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் திட்டத்துக்கு இத்தாலிய அரசாங்கம் ஆதரவளிக்கும் என்று தூதுவர் டெமியானோ பிரான்கோவிக் தெரிவித்தார்.

இலங்கையின் சுற்றுலா, துறைமுகங்கள் மற்றும் முதலீட்டுத் துறைகளுக்கு இத்தாலிய அரசாங்கம் வழங்கக் கூடிய ஆதரவு குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இத்தாலியில் தொழில் வாய்ப்புகளை எதிர்பார்த்திருக்கும் இலங்கை இளைஞர்களின் விசா பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்க எதிர்பார்த்திருப்பதாகவும் இத்தாலியத் தூதுவர் தெரிவித்தார்.

இத்தாலியில் பணிபுரியும் இலங்கையர்களுக்கும், இத்தாலியில் தொழில் வாய்ப்புகளை எதிர்பார்த்திருக்கும் இலங்கையர்களுக்கும் சட்டபூர்வமான தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கு தற்போது தயாரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களுக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்குவதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகேயும் இச்சந்திப்பில் கலந்துகொண்டார். (ம-7)

# ஹெட்டிபொலவில் துப்பாக்கிச் சூடு

## 9 வயது சிறுமி பலி

(ஹெட்டிபொல)

ஹெட்டிபொல - மகுலாகம பகுதியில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இத் துப்பாக்கிச் சூட்டில் ஒரு பெண்ணும் ஒரு சிறுமியும் காயமடைந்து குளியாப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிறுமி சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த சிறுமி 9 வயதுடையவர் என்றும், ஹெட்டிபொல, மகுலாகம பகுதியைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு இறந்த சிறுமி தனது பாட்டியுடன் வீட்டில் தங்கியிருந்தபோது, அருகிலிருந்த சிலர் பன்றிகளை வேட்டையாடும் சத்தம் கேட்டு வீட்டை விட்டு வெளியே வந்தபோது இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாக விசாரணையில் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் காயமடைந்த குறித்த சிறுமியின் பாட்டி குளியாப்பிட்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ம-7)

## வடக்கில்...

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிற்கும் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் இசொமதா அகியோவிற்கும் இடையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்குப் பிராந்தியத்தில் தேசிய நல்லிணக்கத்தை வளர்ப்பதற்காக ஜப்பான், சுவிஸ்சர்லாந்து மற்றும் தென்னாபிரிக்கா இணைந்து மேற்கொள்ளும் திட்டம் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டதோடு அதன் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஜப்பான் தூதுவர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கு தெளிவுபடுத்தினார். (ம-7)


# அந்தியேட்டிக் கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த 29.01.2025 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்

## திருமதி அன்னபூரணம் அரசரத்தினம்



தோற்றம்
17.08.1931

மறைவு
29.01.2025

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 28.02.2025 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது தாயார் சிவபதமடைந்த செய்தி அறிந்து எமது துயரில் பங்குகொண்டு நேரிலும் தொலைபேசி மூலமும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் எமக்கு ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

நெல்லியடி முதலாம் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல் :
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# எல்லை தாண்டி வந்து எம் இனத்தை பட்டினி ஆக்காதே!

## போராட்டத்தில் குதித்த தீவக கடற்றொழில் அமைப்புக்கள்

- கொந்தளித்த மீனவர்கள்
- குவிக்கப்பட்ட பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

**இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கக் கோரி யாழ். நகரில் போராட்டம் ஒன்றை நேற்று தீவக கடற்றொழில் அமைப்பு முன்னெடுத்தது.**

தீவக கடற்றொழில் அமைப்புக்களான மண்டைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, வேலணை, புங்குடுதீவு உள்ளிட்ட கடற்றொழில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.



யாழ். பண்ணையில் உள்ள கடல்வள நீரியல் திணைக்களம் முன்பாக ஆரம்பமான போராட்டம் அங்கிருந்து, இந்தியத் துணைத்தூதரகத்திற்கு சென்று, அங்கிருந்து வடமாகாண ஆளுநர் அலுவலகம் வரை ஊர்வலமாக சென்றனர்.

இதன்போது நிறுத்து நிறுத்து இழுவை மடித்தொழிலை நிறுத்து, தாண்டாதே தாண்டாதே எல்லை தாண்டாதே, வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், அள்ளாதே அள்ளாதே எமது வளத்தை அள்ளாதே, வாழ விடு வாழ விடு எங்களை வாழ விடு, எல்லை தாண்டி வந்து என் இனத்தைப் பட்டினி



ஆக்காதே ஆகிய கோஷங்களை எழுப்பிய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட கடற்றொழிலாளர்கள் நீரியல் வளத்துறை அலுவலகம், இந்தியத் துணைத்தூதரகம் மற்றும் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் மகஜர் ஒன்றையும் கையளித்தனர். (நி-8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறைகள் அதிகரிக்கவில்லை

# சஜித் தரப்புக்கு அரசு பதிலடி



(கொழும்பு)

சமீப காலங்களில் குற்றங்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எதுவும் இல்லை என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாராளுமன்றில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரமதாச நேற்று எழுப்பிய கேள்விகளுக்குப் பதில் அளிக்கையிலேயே அமைச்சர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.


நாட்டில் அதிகரித்து வரும் துப் பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாச கவலை தெரிவித்து, வன்முறை குற்றங்களுக்கு எதிரான அரசாங்கத் தின் நடவடிக்கை குறித்து கேள்வி எழுப்பியிருந்தார்.

அத்தோடு, 2025 ஆம் ஆண் டின் முதல் இரண்டு மாதங்களில் 17 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் சட்டம் மற் றும் ஒழுங்கு, வெளிப்படைத்தன்மை மற்றும் பொது நம்பிக்கை ஆகிய வற்றிற்கான அரசாங்கத்தின் உறுதிப் பாடு தொடர்பில் விமர்சனங்களை யும் எதிர்க்கட்சித் தலைவர் அதன் போது, முன்வைத்திருந்தார்.

இதேவேளை, ஒழுங்கமைக்கப் பட்ட குற்றங்கள் மற்றும் இலக்கு வைக்கப்பட்ட படுகொலைகளின் செல் வாக்கு அதிகரித்து வருவது பொது மக்களின் அச்சங்களை அதிகரித் துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதன்படி, இவற்றுக்குப் பதில் அளித்த பொதுப் பாதுகாப்பு அமைச் சர் ஆனந்த விஜேபால, இந்த ஆண் டின் முதல் இரண்டு மாதங்களில் 14 குற்றச் சம்பவங்களும் 2016 மற்றும் 2018 ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் தலா 12 சம்பவங்களும் 2024 ஆம் ஆண் டின் முதல் இரண்டு மாதங்களில் 14 சம்பவங்களும் பதிவாகியுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில், கடந்த கால குற்றங்கள் குறித்த தரவுகளின்படி, இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களிலும் அதேபோன்ற நிலைமைதான் காணப்படுவதாக வும் அமைச்சர் மேலும் தெரி வித்தார். (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 200 | 150 | 200-220 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 155 | 200 |
| பச்சைமிளகாய் | 1400 | 1200 | 1300 | 1100-1200 | 1300 |
| தக்காளி | 80 | 100 | 120 | 70-80 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 250 | 250-300 | 200 |
| கோவா | 300 | 300 | 300 | 300 | 350 |
| கரட் | 800 | 700-900 | 800 | 800 | 800 |
| பூசணி | 140 | 140 | 150 | 80-100 | 200 |
| புடோல் | 150 | 280 | 150 | 180-200 | 250 |
| வாழைக்காய் | 150 | 100 | 150 | 80-120 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 150-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 180 | 150 | 200 |
| பாகற்காய் | 500 | 450 | 450 | 350-400 | 500 |
| வெண்டக்காய் | 300 | 350 | 300 | 300-400 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 250 | 300 | 350-500 | 400 |
| லீக்ஸ் | 350 | 300 | 380 | 250 | 400 |
| பீற்றூட் | 250 | 200 | 300 | 200 | 300 |
| கறிமிளகாய் | 800 | 800 | 600 | 600-700 | 1000 |
| முருங்கைக்காய் | -- | 2500 | 2000 | 1500 | 2800 |
| போஞ்சி | 150 | 150 | 300 | 150-200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 250 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 150 | 60-70 | 150 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 200-250 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 250 | 240 | 200 | 150-250 | 230-270 |
| இராசவள்ளி | 500 | 400 | 600 | 400-500 | 450 |
| வெங்காயப்பூ | 150 | 100 | 100 | 80-100 | 160 |
| முள்ளங்கி | 100 | 140 | 150 | 120 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 100 | 80 | 100 | 120 |

# இன்று ஒரு தகவல் 331

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## தொந்தி ஒரு தொல்லை!

வாயிலே கொழுப்பு இருந்தாலும் பரவாயில்லை சேர்! எப்படியாவது ஒரு வழியாக சமாளிக்கலாம். ஆனால் வயிற்றிலே மட்டும் கொழுப்பு இருக்கக்கூடாது சேர். அப்படி இருந்தால் அலட்சியமாகவும் விட்டு விடக்கூடாது.

சிலபேர் சொல்வார்கள் எனக்கு தொந்தி கிடையாது சேர். வேண்டும் என்றால் என் வயிற்றை அழுத்திப் பாருங்கள் கல்லு மாதிரியா இருக்கு என்று. வயிறு கல் மாதிரி இருந்தால் உள்ளே கொழுப்பு இல்லை என்று நினைக்கக்கூடாது. வயிற்றுத் தசைக்கு அடியிலே உள்ள கொழுப்பு சில வாத்தியங்களிலே இருக்குமே நரம்பு அதுமாதிரி இறுக்கமாக இழுத்துக் கொண்டிருக்கும் என்று அர்த்தம்.

அதனாலே தொட்டுப் பார்த்தால் கல்லு மாதிரித்தான் இருக்கும். இருந்தாலும் தொந்தி தொந்திதான். வயிற்றில் கொழுப்பு அதிகமாக இருப்பது சங்கடம் தான். அதனாலே கொலெஸ்ட்ரோல் அளவு அதிகமாகும். இதய நோய்கள், நீரிழிவு, Hypertension, Stroke இதுமாதிரி நோய்கள் அதிகம் ஏற்படும்.

ஒருவர் ஒல்லியாக இருக்கலாம். உடம்பு எடை அதிகப்படியாக இல்லாமல் இருக்கலாம். அப்படி இருந்தால் கூட அவர் உடம்பிலே மற்ற பகுதிகளை விட வயிற்றிலே கொழுப்பு அதிகமாக இருக்கும். நாம் தான் ஒல்லியாக இருக்கிறோமே நமக்கு ஒன்றுமில்லை என்று நினைக்கக்கூடாது.

சரி நம் வயிறு இருக்க வேண்டிய அளவைவிட அதிகமாக இருக்கிறதா? இல்லையா? அதை எப்படி கண்டுபிடிப்பது. அதற்கு சில வழி இருக்கிறது.

முதலில் நீங்கள் நேராக நிமிர்ந்து நில்லுங்கள். உங்கள் பார்வையை மட்டும் கீழே தாழ்த்தி கால் விரலைக் கவனியுங்கள். விரல் உங்களுக்குத் தெரிகிறதா? அப்படி என்றால் உங்கள் வயிறு நோர்மல் தான். கால் விரல் உங்கள் கண்ணுக்குத் தெரியவில்லையா? அப்படி என்றால் உங்களுக்கு வயிறு பெரிது தான் சேர். இன்னொரு வழி இருக்கிறது.

ஒரு தரையிலே நீளமாக படுங்கள். ஒரு மீற்றர் நீளமுள்ள அளவுகோல் ஒன்றை எடுத்துக்கொள்ளுங்கள். கழுத்து எலும்பிலே ஒரு பக்கத்தையும் இடுப்பிலே ஒரு பக்கத்தையும் வையுங்கள். படுக்கை வாட்டிலே வையுங்கள். அது நடுப்பகுதி. வயிறு முட்டித் தராசு போல் ஆடுகிறதா? அப்படி என்றால் உங்கள் வயிறு உங்களுக்குப் பிரச்சினை தான்.

மருத்துவ அறிவியல் ரீதியாக உங்களுக்கு தொந்தி இருக்கிறதா? இல்லையா? என்று கண்டுபிடிப்பதற்கு ஒரு வழி இருக்கிறது.

உங்கள் இடுப்பிலே Waist Measurement ஐ Hip Measurement ஆல் வகுக்கவேண்டும். இந்த விகிதம் அதாவது Waist - Hip ratio ஆண்களுக்கு 0.95இற்கு மேலே போகக்கூடாது. பெண்களுக்கு 0.85இற்கு மேலே போகக்கூடாது. அப்படி போய்விட்டது என்றால் வயிறு பெருத்திருக்கிறது என்று அர்த்தம்.

சரி இந்த தொந்தியைக் குறைப்பதற்கு என்ன செய்யலாம்? பட்டினி கிடக்கலாமா? அது தேவையில்லை. ஆனால் கலோரி அளவைக் குறைக்க வேண்டும். அது எப்படி? கொழுப்பு ஆகாரத்தைக் குறைக்க வேண்டும். இப்போது கார்போவைதரேட், புரோட்டீன் எல்லாம் ஒரு கிராமிற்கு சுமார் 4 கலோரி கொடுக்கும். ஆனால் கொழுப்பு ஒரு கிராமிற்கு 9 கலோரி வித்தியாசத்தில் இருக்கும். கலோரி அளவு குறைவாகக் கொடுக்கக்கூடிய ஆகாராம் தான் உண்ண வேண்டும். தொந்தியைக் குறைக்க கடுமையான உடற்பயிற்சி தேவையா? அதுவும் தேவை இல்லை.

ஆகாரத்திலே கொழுப்பைக் குறைத்தாலே போதும். மற்ற ஆகாரம் செரிக்க லேசான உடற்பயிற்சியே போதும். வயிற்றைக் குறைப்பதாக சிலபேர் உட்கார்ந்து உட்கார்ந்து எழுந்திருப்பார்கள். அதுவும் தேவை இல்லை. அப்படி எல்லாம் செய்து உங்களைக் கஷ்டப்படுத்திக்கொள்ள வேண்டாம். வயிற்றைக் குறைப்பதற்கு அது உதவுவதே இல்லை. அது சம்பந்தமாக நிபுணர்கள் சொல்கிறார்கள்.


இது சம்பந்தமாக 1984இல் ஒரு சோதனை செய்து பார்த்தார்கள். ஒரு நாளைக்கு 185 தடவை உட்கார்ந்து உட்கார்ந்து எழுந்திருந்தார்கள். இது போல 27 நாட்கள் பயிற்சி செய்து பார்த்தார்களாம். வயிற்றுக் கொழுப்பிலே எந்த மாறுதலும் இல்லை. அதனால் உட்கார்ந்து எழுந்திருக்கும் வேலை எல்லாம் வேண்டாம்.

தொந்தியைக் குறைக்க முயற்சி செய்பவர்கள் தோற்றத்தை அழகாக்குவது ஒரு பக்கம் இருந்தாலும் ஆரோக்கியமான நீண்ட வாழ்வுக்கு அவர்கள் அஸ்திவாரம் போடுகிறார்கள் என்று தான் அர்த்தம்.

ஒருவர் வந்தார். சேர் எனக்கு தொந்தி இருக்கிறதா? இல்லையா? என்று கண்டுபிடிப்பது கஷ்டமாக இருக்கிறது என்றார். சரி நான் கண்டு பிடிக்கிறேன். இப்படி தரையிலே காலை நீட்டி நேராகப் படுங்கள் என்றேன். இப்போது உங்கள் கண்ணைத் திருப்பி கால் கட்டை விரலைப் பாருங்கள். கட்டை விரல் தெரிகிறதா? என்று கேட்டேன். தெரிகிறது சேர் என்றார். நீங்கள் தெரிகிறது என்று சொல்வதை நான் எப்படி நம்புவது என்றேன். அதோ தெரிகிறதே அந்தக் கட்டை விரல் நுனியிலே ஒரு ஈ கூட உட்கார்ந்து இருக்கிறது பாருங்கள் சேர் என்றார்.

அப்படி என்றால் நீங்கள் பார்ப்பது கட்டை விரல் இல்லை சார். உங்கள் [illegible] அங்கே தான் ஈ உட்கார்ந்திருக்கிறது என்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தின் கண்டகி தீர்த்தக்கரையில் தீர்த்தத்திருவிழா நேற்று பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

## மீனவர்களின் விடுதலையை வலியுறுத்தி இராமேஸ்வரத்தில் உண்ணாவிரதம்

(இராமேஸ்வரம்)

இலங்கைக் கடற்படை யினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி இன்று முதல் இரா மேஸ்வரம் தங்கச்சி மடத்தில் அனைத்து விசைப் படகுகளை யும் நிறுத்தி தொடர் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக இராமேஸ்வர மீனவர்கள் தெரிவித்தனர்.

நேற்று இராமேஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மீன்வளத்துறை வட்டாட்சியர் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உண்ணாவிரதப்போராட்டத்தை கைவிடக் கோரி மீனவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதன்போது குறித்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படாததால் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததையடுத்து மீனவர்கள் தங்கச்சி மடத்தில் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக தெரிவித்துள்ளனர்.

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் உள்ள மீனவர்கள் மற்றும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் உள்ள மீனவர்களை படகு டன் விடுதலை செய்ய வலியுறுத்தி குறித்த போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளனர்.

(6-8-285)

## எச்சங்கள் மீட்பு தொடர்பான வழக்கு இன்று செம்மணியில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் எலும்புத் துண்டுகள் மீட்கப்பட்டமை தொடர்பிலான வழக்கு விசாரணைகள் இன்று நடைபெறவுள்ளது.

அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மின் தகன மேடை அமைப்பதற்காக அத்திவாரம் வெட்டும் போது, மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் காணப்பட்டன.

அதனை அடுத்து அத்திவாரம் வெட்டும் பணியை ஒப்பந்தக்காரர் நிறுத்தி இருந்தனர். இந்நிலையில் குறித்த பகுதியில் மேலும் மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் இருக்கலாம் என்றும் அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்என அரியாலை பகுதியை சேர்ந்த இருவர் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் குறித்த விடயத்தினை யாழ்.நீதவான் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு சென்றதை அடுத்து சம்பவ இடத்திற்கு கடந்த 20 ஆம் திகதி வியாழக்கிழமை நீதவான் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

அதன்போது, சட்ட வைத்திய அதிகாரி, பொலிஸார், தடயவியல் பொலிஸார், நல்லூர் பிரதேச செயலர் ஆகியோரும் சம்பவ இடத்தில் பிரசன்னம் ஆகியிருந்தனர்.

குறித்த பகுதிகளை ஆராய்ந்த பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட நீதவான், மீட்கப்பட்ட எலும்புத் துண்டு களை பகுப்பாய்வுக்கு அனுப்பு மாறும் ஏனைய பகுதிகளை ஸ்கானர் இயந்திர உதவியுடன் முழுமையாக பரிசோதனை செய்யவும் நீதவான் கட்டளையிட்டார்.

அந்நிலையில் குறித்த வழக்கு நேற்று வியாழக்கிழமை யாழ்.நீதவான் நீதிமன்றில், பதில் நீதவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப் பட்ட போது, வழக் கினை இன்றையதினம் (வெள்ளிக்கிழமை) ஒத்திவைத்தார். (6-8-33)

## நாடளாவிய ரீதியில் தாதியர்கள் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

பல கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகளுக்கு முன்பாக நேற்று அரசாங்க தாதியர்கள் 1 மணி நேர போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசாங்கத்தின் 2025 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் கொடுப்பனவுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள குறைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



அரசே தாதியர்களுக்கு பட்ஜெட்டில் சரியான நீதியைப் பெற்றுக்கொடு, சுகாதார ஊழியர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு குறைக்கப்பட்டது ஏன்? 24 மணி நேரமும் 365 நாட்கள் வேலை செய்தவர்களுக்கு குறைத்தது ஏன்? எனும் பதாதைகளை ஏந்தியவாறு நேற்று நண்பகல் 12 மணி முதல் 1 மணி வரை போராட்டத்தில் ஈடுபட்டு இருந்தனர். (6-8)

## இராசிபலன்

28.02.2025
மாசி 16, வெள்ளிக்கிழமை
அமாவாசை முற்பகல் 7.26 மணிவரை.

பிரதமை பின்னிரவு 5.28 மணிவரை
சதையம் பிற்பகல் 3.07 மணிவரை
சுபநேரம் 6.28-7.58 மணிவரை

இராகுகாலம்
10.58-12.28 மணிவரை

வளவன்




எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், வழிபாட்டால் சிறப்பினை காணவேண்டிய .நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், குடும்பத்தினரிடையே சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும்.




எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.




சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், தொழிலில் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும், நண்பர்களின் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.




தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், அரசு வழிச் சலுகைகள் எதிர்பார்த்தபடி வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, கௌரவமான நாள்.




சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், கனவுப் பலிதமுண்டு, பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், பொதுவழியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




வழிபாட்டில் நம்பிக்கை கூடும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.




உறவினர்களின் சந்திப்பால் திடீர் விரயங்கள் ஏற்படலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள்.




தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் தீரும், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், வழிபாடு மகத்துவம் தரும்.




தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், நிலையான வருமானத்திற்கு வழிகிடைக்கும், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு.




மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், பொருளாதார நிலை உயரும்.




உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் வளர்ச்சி கூடும், தொலைதூரத்திலிருந்து வரும் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும், சுபவிரயங்கள் கூடும்.

தேவைகளைக் குறைத்துக் கொண்டவன் தெய்வத்தின் அருகில் உள்ளவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹா சிவராத்திரி - 2025




திருக்கோணேச்சரம்




திருக்கேதீச்சரம்





நகுலேஸ்வரம்




முன்னேச்சரம்




நாவற்குழி திருவாசக அரண்மனை



வெடுக்குநாறி மலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## கால்வாய்க்குள் கவிழ்ந்தது பேருந்து!

* 20 பேர் உயிரிழப்பு
* 25 பேர் மருத்துவமனையில்
* தாய்லாந்தில் சோகம்



(தாய்பேய்)

தாய்லாந்தில் பேருந்தொன்று கால்வாய் ஒன்றில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

49 பேருடன் பயணித்த பேருந்தே விபத்தில் சிக்கியுள்ளது. காயமடைந்த 25 பேர் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

ஆய்வொன்றிற்காகப் பயணித்துக்கொண்டிருந்தவர்களே விபத்தில் சிக்குண்டுள்ளனர்.

காயமடைந்த சிலர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகள் இடம்பெறுவதாகத் தெரிவித்துள்ள தாய்லாந்து பிரதமர் பேடொங்டார்ன் சின்வத்திரா பயன்படுத்துவதற்கு தராதரமற்ற வாகனங்கள் பயன்படுத்தப்பட்டமை அல்லது வாகனங்கள் கண் மூடித்தனமாக பயன்படுத்தப்பட்டமை தெரியவந்தால் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

வாகனங்களின் தரம் தொடர்பான சட்டங்களை நடைமுறைப்படுத்துவது பலவீனமாக காணப்படுவதாலும் வீதிகள் உரிய முறையில் பராமரிக்கப்படாமையினாலும் தாய்லாந்தில் விபத்துக்கள் இடம்பெறுவது வழமையான விடயமாகமாறியுள்ளது. (நி-8)

## ஐந்து ஆண்டுகளின் பின்
## சர்வதேச சுற்றுலாப் பயணிகளுக்கான கதவைத் திறந்தது வடகொரியா




(பியாங்யாங்)

வடகொரியாவில் ஐந்து ஆண்டுகளுக்குப் பின் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா, கனடா, கிரீஸ், நியூசிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஆஸ்திரியா, அவுஸ்திரேலியா மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்த பயணிகள் அதிகம் பயணிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொரோனாத் தொற்று நோய்க்கு முன்னர் வடகொரியாவிற்குப் பயணித்த சர்வதேச சுற்றுலாப் பயணிகளில் 90 சதவீதத்திற்கும் அதிகமானோர் சீனர்கள் என புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

சீன பிரஜைகள் சுமார் 300,000 பேர் வரை வடகொரியாவுக்குப் பயணித்துள்ளனர். (நி-8)

## காசா குறித்து வீடியோ ட்ரம்ப் கிளப்பிய சர்ச்சை

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவுடன் இணைந்து காசாவை நவீன நகரமாக மாற்றியது போல் ஏ.ஐ ஆல் உருவாக்கப்பட்ட வீடியோவை பகிர்ந்ததால் சர்ச்சை எழுந்துள்ளது.

காசாவை தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் படையினருக்கும், இஸ்ரேலுக்கும் இடையே கடந்த 15 மாதங்களாக போர் நடந்தது. இதில் காசா உருத்தெரியாத அளவிற்கு சிதிலமடைந்துள்ளது.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி தன் சமூக வலைதளத்தில் நேற்றுமுன்தினம் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், 'காசா 2025' என்ற தலைப்பில் போரால் வீட்டை இழந்து சாலையில் திரியும் ஒரு சிறுமி உள்ளார். அதன் பின் ட்ரம்பின் காசா என்று வேறு காட்சிகளும் விரிகின்றன.

அதில் பளபளக்கும் சாலைகள், சொகுசுக் கார்கள், சொகுசுக் ஹோட்டல்கள், ட்ரம்பின் ஆயுள் உயர தங்க நிற சிலை, ட்ரம்பை கொண்டாடும் காசா மக்கள், காசாவில் விடுமுறையைக் கழிக்கும் அமெரிக்க தொழிலதிபர் எலான் மஸ்க், கடற்கரையில் சூரியக் குளியலில் ஈடுபடும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு ஆகியோரின் காட்சிகளும் உள்ளன.

இதன் பின்னணியில் 'ட்ரம்பின் காசா பிரகாசமாக ஜொலிக்கிறது' என்ற பாடலும் ஒலித்தது. இந்த வீடியோவுக்கு பலர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

'உண்மையில் இதை ட்ரம்ப் தான் பதிவிட்டாரா. பதவிக்கு உண்டான மதிப்பு எங்கே' என்று பலரும் விமர்சித்துள்ளனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, ஜனாதிபதி ட்ரம்பை அமெரிக்காவில் சந்தித்தார்.

அப்போது செய்தியாளரிடம் பேசிய ட்ரம்ப், 'காசாவை அமெரிக்கா எடுத்துக்கொள்ளும். அங்கு பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தி, ஏராளமான வேலைவாய்ப்புக்களை வழங்குவோம், வீடு கட்டித்தருவோம்.

காசா புனரமைக்கப்பட்ட பின் பாலஸ்தீனர்கள் உட்பட உலக மக்கள் பலரும் அங்கு வசிப்பர்' எனத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## பணயக் கைதிகளின் உடல்களை ஒப்படைத்தது ஹமாஸ்



(ஜெருசலேம்)

காசா பகுதியில் போர் நிறுத்தத்தின் முதல் கட்டம் முடிவுக்கு வரவுள்ள நிலையில் நூற்றுக்கணக்கான பாலஸ்தீனியக் கைதிகளை இஸ்ரேல் விடுவித்ததற்கு ஈடாக நான்கு பணயக் கைதிகளின் உடல்களை நேற்று வியாழக்கிழமை அதிகாலை செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஹமாஸ் ஒப்படைத்தது.

ஹமாஸ் பணயக்கைதிகளின் உடல்களை செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்ததை இஸ்ரேலிய பாதுகாப்பு அதிகாரி உறுதிப்படுத்தினார்.

ஒப்படைக்கப்பட்ட உடல்களை அடையாளம் காணும் செயல்முறை தொடங்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் தெரிவித்தது.

அதே நோக்கில், விடுவிக்கப்பட்ட பல பாலஸ்தீனிய கைதிகளை ஏற்றிச் சென்ற செஞ்சிலுவைச் சங்க வாகனத் தொடரணி ஒன்று இஸ்ரேலின் ஆஃபர் சிறையிலிருந்து மேற்குக் கரை நகரமான பெய்டுனியாவை நோக்கிச் சென்றது.

பேருந்துகளில் விடுவிக்கப்பட்ட கைதிகளை பார்வையிடுவதற்காக அங்கு நூற்றுக்கணக்கான நலன் விரும்பிகள் கூடியிருந்தனர்.

விடுதலை செய்யப்பட்ட கைதிகளை நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் கட்டிப் பிடித்தும், புகைப்படங்கள் எடுத்தும் வாழ்த்து தெரிவித்தனர்.

600 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியக் கைதிகளை இஸ்ரேல் ஒப்படைத்த போதும் பணயக்கைதிகளை கொடூரமாக நடத்தியதை எதிர்த்து இஸ்ரேல் கடந்த சனிக்கிழமை முதல் அவர்களது விடுதலையை தாமதப்படுத்தியது.

இந்த தாமதத்தை போர் நிறுத்தத்தின் "தீவிர மீறல்" என்று கூறிய ஹமாஸ் போராளிக் குழு, பாலஸ்தீனியர்கள் விடுவிக்கப்படும் வரை இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை சாத்தியமில்லை என்றும் தெரிவித்தது.

போர் நிறுத்தம் ஜனவரி 19 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது. பல பின்னடைவுகள் இருந்தபோதிலும், பெரும்பாலும் அமுலில் இருந்தது.

ஆனால், அதன் முதல் கட்டம் இந்த வாரத்தில் முடிவடைய உள்ளது. மற்றும் போரை முடிவுக்கு கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட அதன் அடுத்த கட்டத்தின் தலைவிதி இன்னும் தெளிவாக இல்லை. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்த கிளிநொச்சி மாவட்ட செயலக அணி

(கிளிநொச்சி)

வடமாகாண மாவட்ட செயலக அணிகளுக்கு இடையிலான ஆண்களுக்கான நாட்டிற்கு குறுக்கான ஓட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட செயலக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

வடமாகாண மாவட்ட செயலக அணிகளுக்கு இடையிலான ஆண்களுக்கான 10 கிலோமீற்றர் தூரம் கொண்ட நாட்டிற்கு குறுக்கான ஓட்டம் கடந்த 23 ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெற்றது.



இதில் ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி மாவட்ட செயலக அணி சம்பியன் கிண்ணத்தையும் வவுனியா மாவட்ட செயலக அணி இரண்டாமிடத்தையும் யாழ்ப்பாண மாவட்ட செயலக அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-90)

# இழப்பீட்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் பாரபட்சம்

## விவசாயிகள் கவலை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளப்பாதிப்பினால் ஐயாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நெற்செய்கை அழிவடைந்துள்ளதாக 2520 விவசாயிகள் விண்ணப்பித்துள்ள போதும் 296 ஏக்கருக்குரிய 230 விவசாயிகளுக்கு மாத்திரமே 2.7 மில்லியன் ரூபாய் இழப்பீடாக ஒதுக்கியிருப்பது கவலையளிப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பு மற்றும் இரணை மடுக்குளத்தின் வான் கதவுகள் தொடர்ந்து திறந்து விடப்பட்டமையால் சுமார் ஐயாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி அழிவடைந்ததாக 2520 விவசாயிகள் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கமநல சேவை நிலையங்களினூடாக விண்ணப்பித்திருந்தனர்

இந் நிலையில் வெள்ளத்தால் அழிவடைந்த பயிர்களை மதிப்பீடு மேற்கொண்ட காப்புறுதித் திணைக்கள அதிகாரிகள் நோய் மற்றும் களைகளின் தாக்கம் என அழிவு மதிப்பீடுகளைத் தட்டிக் கழித்து 296 ஏக்கர் மாத்திரமே அழிவடைந்ததாகவும் இதனால் 230 விவசாயிகள் மாத்திரமே பாதிக்கப்பட்டதாகவும் இதற்கான இழப்பீடாக 2.7 மில்லியன் ரூபாய் மாத்திரமே வழங்கப்பட உள்ளது.

வவுனியா மாவட்டத்தில் 1340.2 ஏக்கர் நிலப்பரப்பு அழிவடைந்ததாகவும் இதனால் 912 விவசாயிகள் பாதிக்கப்பட்டதாகவும் இவர்களுக்கு 16.81 மில்லியன் ரூபாய் இழப்பீடும் அதேபோல மன்னார் மாவட்டத்தில் ஒன்பது ஆயிரத்து 228 ஏக்கர் நிலப்பரப்பு அழிவடைந்த நிலையில் பாதிக்கப்பட்ட 4285 விவசாயிகளுக்கு 126 மில்லியன் ரூபாய் இழப்பீடாக வழங்கப்படவுள்ளது.

ஆனால் அதிக பாதிப்பை எதிர் கொண்ட கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீட்டுத் தொகையை வழங்குவதை தட்டிக்கழித்து குறைந்த அளவான பயிர் நிலங்கள் அழிவடைந்ததாக தெரிவித்து மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (6-8-315)

# மகளிர் விவகார அமைச்சர் வவுனியாவிற்கு விஜயம்



(வவுனியா)

மகளிர் விவகார அமைச்சர் சரோஜினி போல்ராஜ் நேற்று முன்தினம் வவுனியாவிற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்ததுடன், தேசிய மக்கள் சக்தியின் மகளிர் அணியினருடனான சந்திப்பொன்றினையும் மேற்கொண்டிருந்தார்.

குறித்த சந்திப்பானது வவுனியாவில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது அமைச்சரிடம் வவுனியா மாவட்டத்தில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாக பெண்களினால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்ததுடன், கோரிக்கை கடிதங்களும் கையளிக்கப்பட்டிருந்தன.

குறித்த சந்திப்பில் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க, தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள், பொது அமைப்புக்களைச் சேர்ந்த பெண்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அதேவேளை வவுனியா கந்தசாமி கோவிலில் நடைபெற்ற சிவராத்திரி பூஜையிலும் அமைச்சர் பங்கேற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3303

### அனுஷ்கா




### ரித்திகா




### சர்ஜன்




### இமாத்




### அஸ்விந்




### உஷாந்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி விளம்பரங்களால் ஏமாற வேண்டாம்

## தொழில் அமைச்சு


(கொழும்பு)

நிலையான வேலைவாய்ப்பு வழங்குவதாகக் கூறி சமூக ஊடகங்கள் மூலம் பகிரப்படும் விளம்பரம் பொய் யானது என்று தொழில் அமைச்சு விசேட அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதுபோன்ற விளம்பரங்களின் ஒரே நோக்கம் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் வங்கிக் கணக்கு விபரங்களைத் திருடுவது என்று தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் இதுபோன்ற போலி விளம்பரங்களால் மக்கள் ஏமாற வேண்டாம் என்றும் தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-8)

# எகிப்து தூதுவர்-ஜனாதிபதி சந்திப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் எகிப்து தூதுவர் ஆதில் இப்ராஹிம் அஹமட் இப்ராஹிம் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கை மற்றும் எகிப்துக்கு இடையில் நீண்ட காலமாக காணப்படும் நட்புறவை பலப்படுத்துவது தொடர்பிலும் இருநாட்டு சுற்றுலா மற்றும் முதலீட்டு துறைகளில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மேலும் மத்திய கிழக்கு வலயத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்தும் இதன்போது கவனத்தில் கொள்ளப்பட்டது.

இதில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே, எகிப்து அரபு குடியரசு தூதரகத்தின் ஆலோசகர் மொஹமட் மாதி ஆகியோரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர். (நி-8)


யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி பழைய மாணவர் (தாய்ச்) சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம்-2025

காலம் : 02.03.2025
நேரம் : காலை 9.00 மணி
இடம் : கல்லூரியின் நூலக மண்டபம்

நிகழ்ச்சி நிரல்
- இறை வணக்கம்
- தலைமையுரை
- செயலாளர் அறிக்கை முன்வைத்தல்
- பொருளாளர் கணக்கறிக்கை சமர்ப்பித்தல்
- பிரேரணைகள் முன்வைத்தல்
- புதிய நிர்வாகத் தெரிவு
- நன்றியுரை

தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- குறிப்பு-புதிய அங்கத்தவர்கள் இணைப்பும் இடம்பெறும்.

(3531) செயலாளர்


# படவரைஞர்களைப் பதிவு செய்தல்-2025

யாழ்.மாநகரசபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள்(புதிதாக பதிவு செய்ய விரும்புபவர்கள் மற்றும் பதிவினை புதுப்பித்துக் கொள்ள விரும்புபவர்கள்) கீழ்வரும் விடயங்களினைக் கருத்திற் கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம் என்பதுடன் மேலும் உரிய ஆவணங்களுடன் அலுவலக நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.00 மணிவரை 14.03.2025ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை பௌதிகத் திட்டமிடல் பகுதியில் மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- **NVQ-5 in Drafting Technology(Buildings)** கற்கை நெறியைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மற்றும் **NVQ-5 Drafting Technology(Buildings)** கற்கை நெறியினை தொடர்ந்து கற்பவர்கள் அதனை உறுதிப்படுத்தும் ஆவணத்தினை சமர்ப்பித்து பதிவினை மேற்கொள்ள முடியும்.
- மேற்குறிப்பிட்ட நிபந்தனைக்கு அமைவாக 2025 படவரைஞர் பதிவுக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை.
- மேற்குறிப்பிட்ட நிபந்தனைக்கு அமைய பதிவினை மேற்கொண்டவர்கள் மேற் குறிப்பிட்ட திகதிக்குள் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறும் படவரைஞர்களும் புதிதாக பதிவுகளை மேற்கொள்ளாத படவரைஞர்களும் 2025 ஆம் ஆண்டிற்கான படவரைஞராக யாழ். மாநகர சபையில் தொழிற்பட முடியாது.

**குறிப்பு**

- ❖ படவரைஞராக பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூபா 1000.00+ VAT
- ❖ உரியவாறு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, படவரைஞராக பதிவு மேற்கொள்வதற்கு தெரிவு செய்யப்படுபவர்களுக்கான கட்டணம் ரூபா 2000+ VAT

(சி-2345)

மாநகர ஆணையாளர், யாழ்.மாநகர சபை.


# மணிவிழா வாழ்த்துக்கள்



திருமதி.
ஞானாம்பிகை தவராசசிங்கம்
(ஆரம்பப்பிரிவு பகுதித் தலைவர்)
(SLTS-I)

சேவை விபரம்
- யா/பலாலி சித்தி விநாயகர் வித்தியாலயம் (1989.01.20 - 1993.03.07)
- கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை (1993.03.08 - 1994.12.31)
- யா/குட்டியப்புலம் அ.த.க பாடசாலை (1995.01.01 - 1997.02.16)
- யா/வயாவிளான் ஸ்ரீவேலுப்பிள்ளை வித்தியாலயம் (1997.02.17 - 1999.12.31)
- யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் (2000.01.01 - 2011.12.31)
- யா/வயாவிளான் ஸ்ரீவேலுப்பிள்ளை வித்தியாலயம் (2012.01.01 - 2013.05.13)
- யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி (2013.05.14 - 2014.02.13)
- யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் (2014.02.14 - 2025.02.27)

Best Wishes

14.02.2014 தொடக்கம் எமது பாடசாலையில் ஆசிரியராகவும் ஆரம்பப்பிரிவு பகுதித் தலைவராகவும் பதினொரு ஆண்டுகள் அர்ப்பணிப்பான சேவையை ஆற்றி 27.02.2025 இல் சேவையில் இருந்து ஓய்வு பெறும் ஆரம்பப்பிரிவு பகுதித்தலைவர் திருமதி.ஞானாம்பிகை தவராசசிங்கம் அவர்களது ஓய்வு காலம் சிறப்பாக அமைய உளமார வாழ்த்துகின்றோம்.

(3530)

வாழ்த்துவோர்- ஆசிரியர் நலன்புரிச் சங்கம், யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1988 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 5.8<br>கி.பா: 26<br>தகைமை/தொழில்: lab Technician<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/15170 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 57 8 இல் செவ்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: பட்டதாரி, Engineer<br>எதிர்பார்ப்பு:Engineer,Doctor, Accountant<br>தொ.இ: G/11319 |
| பிறப்பு:1984 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 03<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L,Hotel management<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: B/1517 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 17<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: G/12110 |
| பிறப்பு:1988 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கிபா:24 உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:O/L,Own BUSINESS<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15172 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா:36 3/4<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்:BA,DO<br>எதிர்பார்ப்பு:தகுந்தவரன்,விவாகரத்தானவர்<br>தொ.இ: G/14185 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன் 713

## காவியத் தொடர் பாகம் -III





அன்று காலையில் தாங்கள் கடலில் மூழ்கி விட்டதாகச் செய்தி வந்த போது இந்த நகரின் மாந்தர் எழுப்பிய ஓலத்தையும் பிரலாபத்தையும் தாங்கள் கேட்டிருந்தால். ஏன் இந்த விஹாரத்துக்குள்ளேயே அன்று காலை கண்ணீர்விட்டுக் கதறாதவர் யாரும் இல்லையே?"

பொன்னியின் செல்வன் கட்டிலில் எழுந்து உட்கார்ந்து, "குருதேவரே! என்ன சொல்கிறீர்கள்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே? நான் கடலில் முழுகிவிட்டதாகச் செய்தி வந்ததா? எப்போது வந்தது? யார் அத்தகைய பயங்கரச் செய்தியைக் கொண்டு வந்தது? எதற்காக?" என்று கேட்டான்.

"யார் கொண்டு வந்தார்களோ, தெரியாது! ஒருநாள் காலையில் அந்தச் செய்தி இந்த நகரமெங்கும் பரவிவிட்டது. தங்களை இலங்கையிலிருந்து கோடிக்கரைக்கு ஏற்றி வந்த கப்பல் சுழல் காற்றில் அகப்பட்டு மூழ்கி விட்டதாக ஜனங்கள் பேசிக் கொண்டார்கள்.

கோடிக் கரையோரமாக தனாதிகாரி பழுவேட்டரையர் தங்களை எவ்வளவோ தேடியும் தங்கள் உடல்கூட அகப்படவில்லையென்றும், ஆகையால் கடலில் மூழ்கிப் போயிருக்க வேண்டும் என்றும் பராபரியாகச் செய்தி பரவிவிட்டது. அதைக் கேட்டுவிட்டு நான்கூட இந்த விஹாரத்தின் வாசலில் நின்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன்.

அப்போது இன்னொரு பிக்கு வந்து, நோயாளியை ஏற்றிக் கொண்டு ஒரு படகு விஹாரத்தின் பின்புறத்துக் கால்வாயில் வந்திருப்பதாகத் தெரிவித்தார். நான் உடனே வந்து பார்த்த போது படகில் உள்ள நோயாளி தாங்கள்தான் என்பதைக் கண்டேன். பிறகு மூன்று நாட்களாகச் சிகிச்சை செய்து வந்தோம். நேற்றுத்தான் தங்களுக்கு நினைவு வந்தது."

"ஆச்சாரியரே! என்னைப் படகில் ஏற்றிக்கொண்டு வந்தது யார்? சொல்ல முடியுமா?" "ஒரு இளைஞனும், ஒரு யுவதியும் படகைத் தள்ளிக் கொண்டு வந்தார்கள்."

"ஆம், ஆம் எனக்குக்கூட கனவில் கண்டது போல் நினைவுக்கு வருகிறது. அந்த இளைஞனும் யுவதியும் யார் என்று தெரியுமா? இளைஞன் வாணர் குலத்து வந்தியத் தேவனா?"

"இல்லை, ஐயா! அவன் பெயர் சேந்தன் அமுதன் என்று சொன்னான். சிவபக்தி மிக்கவன் என்று தோன்றியது. பெண்ணின் பெயரை நான் அறிந்து கொள்ளவில்லை. தேக திடமும் மனோவலிமையும் வாய்ந்தவள்"

"அவள் யார் என்று நான் ஊகிக்க முடியும். ஓடக்காரப் பூங்குழலி தியாகவிடங்கரின் மகள். அவர்கள் என்னை எதற்காக இங்கே அழைத்து வந்தார்கள் என்று சொல்லவில்லையா?"

"இல்லை! இளவரசே! நான் அவர்களிடம் அதைப் பற்றிக் கேட்கவும் இல்லை."

"நான் இங்கு பத்திரமாயிருக்கிறேன் என்று தாங்கள் யாருக்கும் தெரியப்படுத்த வில்லையா?"

"இல்லை, ஐயா! யாருக்கும் சொல்ல வேண்டாம் என்று தங்களை அழைத்து வந்தவர்கள் சொன்னார்கள். தங்கள் உடல் நிலையை முன்னிட்டுச் சொல்லாமலிருப்பதே நல்லது என்று நானும் எண்ணினேன்."

"ஆச்சாரியரே! இதில் ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கிறது. என்னைச் சிறைப்படுத்திக் கொண்டு வரும்படி என் தந்தை மும்முடிச்சோழ மகாராஜா கட்டளையிட்டிருந்தார். அதற்கிணங்கவே நான் இலங்கையிலிருந்து புறப்பட்டேன். நடுவில் ஏதேதோ சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டன.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## மணல் எழுத்து



(நேற்றையதொடர்ச்சி)

சோபன் வலியும் அவமானமும் கொண்டவனாகப் பாலை வனத்தின் மணலில் இன்று நண்பன் கோபன் என்னை அடித்து விட்டான் என்று பெரிதாக எழுதி வைத்துவிட்டு நடக்கத் தொடங்கினான். கையில் இருந்த உணவும் தண்ணீரும் தீர்ந்து போய்விடவே கோபனால் நடக்கவே முடியவில்லை.

சோபனும் பசியோடு பாதி மயக்கத்தில் நடந்து கொண்டிருந்தான். இருவரும் தனித்தனியாக நடந்து தண்ணீர் கிடைக்காமல் அலைந்து திரிந்தார்கள்.

வெயில் மிகவும் கொதித்தது. நாக்கு உலர்ந்து போய் தண்ணீர் தேடி அலைந்தார்கள். அப்போது ஒரு இடத்தில் சிறிதளவு தண்ணீர் கசிவதைக் கண்டு கோபன் ஓடிச் சென்று தண்ணீர் குடிக்க முயன்றான். திடீரென சோபனின் நினைவு வந்தது. சே இவ்வளவு காலம் பழகிய நண்பனை ஒரு கஷ்டம் என்று வந்ததும் அடித்து விரட்டி விட்டோமே என்று தோன்றியதும் சோபன் பெயரைச் சொல்லி சத்தமிட்டு அழைத்தான்.

அந்தக் குரல் கேட்டு ஓடோடி வந்த சோபன் அங்கே ஒரு ஆள் குடிக்குமளவு தண்ணீர் இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தான்.

இதில் உள்ள தண்ணீரை ஒருவன் மட்டுமே குடிக்க முடியும் நீயே குடித்துக் கொள் என்றான் கோபன். உடனே தாகமிகுதியில் சோபன் அந்தத் தண்ணீரை முழுமையாகக் குடித்து விட்டு நண்பனைக் கட்டிக் கொண்டு நன்றி தெரிவித்தான். இருவரும் ஒன்றாக நடக்கத் தொடங்கினார்கள்.

சோபன் அங்கிருந்த ஒரு கல்லில் இன்று என் நண்பன் கோபன் மறக்க முடியாத ஒரு உதவி செய்தான் என்று எழுதி வைத்தான்.

அதைக் கண்ட கோபன் நான் உன்னை அடித்த போது அதை மணலில் எழுதி வைத்தாய். உதவி செய்த போது அதைக் கல்லில் எழுதி வைக்கிறாய் அது ஏன் என்று கேட்டான்.

அதைக் கேட்ட சோபன் நண்பா! நண்பர்களுக்குள் நடந்த தவறுகள் காற்றோடு போக வேண்டியவை. அதனால் அதை மணலில் எழுதி வைத்தேன். ஆனால் செய்த நன்றி என்றும் மறக்கக் கூடாதது. ஆகவே அதை கல்லில் எழுதி வைத்தேன் என்று சொன்னான். நட்பு என்பது கைமாறில்லாத நன்றியுடையது என்பதை கோபன் அன்று தான் புரிந்து கொண்டான்.

இது ஒரு அரபுக் கதை. உலகில் எந்த மனிதனும் தனியானவன் இல்லை. அவனது செய்கைகளும் வெறுப்பும் கோபமுமே அவனைத் தனிமைப்படுத்துகின்றன. வாழ்வில் தேடித்தேடி நாம் சேகரித்து வைக்க வேண்டியது பணத்தையல்ல, நல்ல நண்பர்களைத் தான்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள பசுமை ஐதரசன் ஒரு தீர்வாகுமா?

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு

(சென்ற வாரத் தொடர்ச்சி)

**பசுமை ஐதரசனின் பயன்பாடுகள்**

பசுமை ஐதரசன் பல்வேறு துறைகளில் படிம எரிபொருட்களுக்கு மாற்றாகப் பயன்படுத்தப்படலாம். பசுமை ஐதரசன் எரிபொருட்கலன்கள் அல்லது ஐதரசன் எரிவாயு விசையாழிகள் மூலம் மின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படலாம். இது குறிப்பாக புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்கள் குறைவாக இருக்கும் நேரங்களில் தேவைப்படும் மின்சாரத்தை வழங்க உதவும். மின்கலங்களை விட நீண்ட கால சக்தி சேமிப்பிற்கு ஐதரசன் ஒரு சிறந்த தீர்வாக இருக்கும்.

போக்குவரத்துத் துறையில், பசுமை ஐதரசன் எரிபொருள் கலன் வாகனங்களில் (Fuel Cell Vehicles - FCVs) பயன்படுத்தப்படலாம். FCVs மின்சார வாகனங்களைப் போலவே இயங்கும் ஆனால் மின்கலங்களுக்கு பதிலாக ஐதரசன் எரிபொருள் கலன்களைப் பயன்படுத்துகின்றன. இவை வேகமாக எரிபொருள் நிரப்பவும் மற்றும் நீண்ட தூரம் பயணிக்கக் கூடியவாறு இருக்கிறது. பேருந்துகள் மற்றும் பாரவூர்திகள் போன்ற பெரிய வாகனங்களுக்கும் ஐதரசன் எரிபொருள் கலன் தொழில்நுட்பம் பொருத்தமானது. இவை அதிக சுமைத் திறன் மற்றும் நீண்ட தூர பயணங்களுக்கு ஏற்றவை. பசுமை ஐதரசன், கப்பல் மற்றும் விமான போக்குவரத்தையும் சுத்தப்படுத்த உதவும்.


ஐதரசன் அடிப்படையிலான எரிபொருட்கள் கப்பல்கள் மற்றும் விமானங்களுக்கான கார்பன் வெளியேற்றத்தை குறைக்க உதவும். அமோனியா மற்றும் உரங்கள் போன்ற இரசாயனங்களை உற்பத்தி செய்ய ஐதரசன் முக்கிய மூலப்பொருளாக காணப்படுகிறது. பசுமை ஐதரசனைப் பயன்படுத்தி இரசாயன உற்பத்தியை சுத்தப்படுத்த முடியும். எண்ணெய் சுத்திகரிப்பு செயல்முறைகளிலும் ஐதரசன் பயன்படுகிறது. பசுமை ஐதரசனைப் பயன்படுத்தி சுத்திகரிப்பு நிலையங்களின் கார்பன் வெளியேற்றத்தையும் குறைக்கலாம்.

வீட்டு வெப்பமூட்டலுக்கு, பசுமை ஐதரசன் வீடுகளை வெப்பப்படுத்த பயன்படுத்தப்படலாம். ஐதரசன் எரிவாயு கொதிகலன்கள் அல்லது எரிபொருள் கலன் அடிப்படையிலான வெப்பமூட்டும் அமைப்புகள் வீடுகளுக்கு சுத்தமான வெப்பத்தை வழங்க முடியும். ஏற்கனவே இயற்கை எரிவாயுக் குழாய் கட்டமைப்பு உள்ள பகுதிகளில் ஐதரசன் கலந்த இயற்கை எரிவாயுவை பயன்படுத்தலாம் அல்லது முழுமையாக ஐதரசனாக மாற்றலாம். சக்தி சேமிப்புக்கு, புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தை பசுமை ஐதரசனாக மாற்றி சேமிக்க முடியும். தேவைப்படும் போது இந்த ஐதரசன் மீண்டும் மின்சாரமாக மாற்றப்படலாம் அல்லது பிற பயன்பாடுகளுக்கு பயன்படுத்தப்படலாம். இது புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களின் நம்பகத்தன்மையை அதிகரிக்கும்.

**சவால்கள் மற்றும் வாய்ப்புகள்**

பசுமை ஐதரசன் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள ஒரு பெரிய திறனைக் கொண்டிருந்தாலும் பல சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. பசுமை ஐதரசன் உற்பத்தி சாம்பல் ஐதரசன் உற்பத்தியை விட தற்போது அதிக செலவுடையதாகக் காணப்படுகின்றது. மின்பகுப்பு தொழில்நுட்பம் மற்றும் புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தின் விலை இன்னும் அதிகமாக இருப்பதால் உற்பத்தி செலவை குறைக்க வேண்டியது அவசியம்.

தொழில்நுட்ப மேம்பாடுகள் மற்றும் உற்பத்தி அளவை அதிகரிப்பதன் மூலம் செலவுகளை குறைக்க முடியும். பசுமை ஐதரசன் உற்பத்தி, சேமிப்பு, போக்குவரத்து மற்றும் விநியோகத்திற்கான உட்கட்டமைப்பு இன்னும் ஆரம்ப கட்டத்தில் காணப்படுகிறது. ஐதரசன் குழாய்கள், சேமிப்பு தொட்டிகள் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் போன்றவற்றை உருவாக்க கணிசமான முதலீடு தேவைப்படும். தற்போதுள்ள இயற்கை எரிவாயு குழாய் கட்டமைப்பை ஐதரசன் போக்குவரத்துக்கு பயன்படுத்த முடியுமா என்பதையும் ஆராய வேண்டும். மின்பகுப்பு மற்றும் ஐதரசன் எரிபொருள் கலன்களின் சக்தி திறனை மேம்படுத்த இன்னும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தேவைப்படுகிறது. சக்தி மாற்றும் செயன்முறைகளில் ஏற்படும் இழப்புகளை குறைப்பதன் மூலம் ஒட்டுமொத்த செயற்றிறனை அதிகரிக்க முடியும்.




மேலும், உலகளாவிய சக்தி தேவைகளை பூர்த்தி செய்ய பசுமை ஐதரசன் உற்பத்தியை மிகப்பெரிய அளவில் அதிகரிக்க வேண்டும். இது தொழில்நுட்பம், முதலீடு மற்றும் கொள்கை ஆதரவு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த முயற்சியால் மட்டுமே சாத்தியமாகும். பெரிய அளவிலான பசுமை ஐதரசன் திட்டங்களை செயற்படுத்த அரசாங்கங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து செயற்பட வேண்டும்.

இருப்பினும், இந்த சவால்களுக்கு மத்தியில் பசுமை ஐதரசன் எதிர்காலத்தில் ஒரு பெரிய வாய்ப்பாக உருவெடுக்க முடியும். தொழில்நுட்ப முன்னேற்றங்கள், அரசாங்கக் கொள்கைகள் மற்றும் தனியார் முதலீடுகள் பசுமை ஐதரசன் செலவுகளை குறைக்க உதவும் மற்றும் உட்கட்டமைப்பை மேம்படுத்தும். பல நாடுகள் பசுமை ஐதரசன் பொருளாதாரத்தை நோக்கி நகர திட்டங்களை வகுத்து வருகின்றன. இது புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

**உலகளாவிய முயற்சிகள்**

பல நாடுகள் பசுமை ஐதரசனின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதன் வளர்ச்சியை ஊக்குவிக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. ஐரோப்பிய ஒன்றியம் பசுமை ஐதரசன் உத்தி (EU Hydrogen Strategy) மூலம் 2030 ஆம் ஆண்டிற்குள் 40 GW மின்பகுப்புத் திறனை நிறுவுவதை இலக்காக கொண்டுள்ளது. மேலும், ஐதரசன் பயன்பாட்டை பல்வேறு துறைகளில் ஊக்குவிக்க கொள்கைகள் மற்றும் நிதியுதவியை வழங்குகிறது. ஜேர்மனி பசுமை ஐதரசன் தொழில்நுட்பத்தில் முன்னணியில் உள்ளது. தேசிய ஐதரசன் உத்தி மூலம் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கவும், சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்தவும் திட்டமிட்டுள்ளது. ஜேர்மனி எரிபொருள் கலன் வாகனங்கள் மற்றும் ஐதரசன் உட்கட்டமைப்பில் அதிக முதலீடு செய்துள்ளது. அவுஸ்திரேலியா அதிக சூரிய ஒளி மற்றும் காற்று வளம் கொண்ட நாடு. பசுமை ஐதரசன் உற்பத்தியில் உலகளாவிய மையமாக மாற இலக்கு நிர்ணயித்துள்ளது. தேசிய ஐதரசன் உத்தி மூலம் ஏற்றுமதியை ஊக்குவிக்கவும் உள்நாட்டு பயன்பாட்டை அதிகரிக்கவும் திட்டமிட்டுள்ளது. அவுஸ்திரேலியா ஆசிய நாடுகளுக்கு பசுமை ஐதரசன் ஏற்றுமதி செய்ய வாய்ப்புள்ளது.

ஜப்பான் மற்றும் தென் கொரியா எரிபொருள் கலன் வாகனங்கள் மற்றும் ஐதரசன் எரிசக்தி தொழில்நுட்பத்தில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றன. இரண்டு நாடுகளும் ஐதரசன் உள்கட்டமைப்பு மற்றும் பயன்பாட்டை மேம்படுத்த தீவிரமாக செயற்பட்டு வருகின்றன. உலகளாவிய அளவில் பசுமை ஐதரசன் முக்கியத்துவம் பெறுவதை உணர்ந்து, இலங்கையும் இந்தத் துறையில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது. காலநிலை மாற்றத்திற்கான தீர்வுகளில் பசுமை ஐதரசனின் பங்களிப்பை இலங்கை அரசு அங்கீகரித்துள்ளது. இருப்பினும், உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது, இலங்கையில் பசுமை ஐதரசன் துறை இன்னும் ஆரம்ப கட்டத்திலேயே உள்ளது.

பசுமை ஐதரசன் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள ஒரு நம்பிக்கையான மற்றும் நிலையான தீர்வாக உருவெடுத்துள்ளது என்பதில் சந்தேகமில்லை. இது தூய்மையான எரிபொருள், புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்து உற்பத்தி செய்யக்கூடியது. மற்றும் பல்வேறு பயன்பாடுகளை கொண்டது. மின் உற்பத்தி, போக்குவரத்து, தொழில் மற்றும் வெப்பமூட்டல் துறைகளில் பசுமை ஐதரசன் படிம எரிபொருட்களுக்கு மாற்றாகப் பயன்படுத்தப்படலாம். சவால்கள் இருந்தாலும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள், அரசாங்க கொள்கைகள் மற்றும் தனியார் முதலீடுகள் பசுமை ஐதரசனின் எதிர்காலத்தை பிரகாசமாக்கும். உலக நாடுகள் பசுமை ஐதரசன் பொருளாதாரத்தை நோக்கி நகர்வது காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்த ஒரு முக்கியமான படியாகும்.

தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்கள் ஒன்றிணைந்து பசுமை ஐதரசனின் வளர்ச்சியை ஆதரிக்க வேண்டும். இது சுத்தமான மற்றும் நிலையான எதிர்காலத்தை உருவாக்க உதவும். பசுமை ஐதரசன் மட்டுமே காலநிலை மாற்றத்திற்கான முழுமையான தீர்வு அல்ல. சக்தித் திறன் மேம்பாடு, புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களின் பரவலான பயன்பாடு மற்றும் கார்பன் வெளியேற்றத்தை குறைக்கும் பிற தொழில்நுட்பங்கள் ஆகியவற்றுடன் பசுமை ஐதரசனும் இணைந்து செயற்படும்போது மட்டுமே நாம் காலநிலை மாற்றத்தின் தீவிரத்தைக் குறைக்க முடியும். ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறை மூலம் பசுமையான மற்றும் வளமான பூமியை வருங்கால சந்ததியினருக்கு விட்டுச்செல்வோம்.

(முற்றும்)

கலாநிதி.
அமல்ராஜ் பீற்றர் அமலதாஸ்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பௌதிகவியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆப்கான் திரில் வெற்றி
## வெளியேறியது இங்கிலாந்து அணி




ஐ.சி.சி சம்பியன்ஸ் டிராபி தொடரில் இங்கிலாந்து அணியை 8 ரன்கள் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தான் வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் இங்கிலாந்து அணி தொடரில் இருந்து வெளி யேற்றப்பட்டது.

லாகூரில் உள்ள கடாபி கிரிக்கெட் மைதானத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற போட்டியில் இங்கிலாந்து, ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற ஆப்கானிஸ்தான் அணி பட்டிங் தேர்வு செய்தது.

ஆப்கான் அணி யின் தொடக்க ஆட்டக்காரர் இப்ராஹிம் சத்ரான் 146 பந்துகளில் 177 ரன்கள் எடுத்தார்.

சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் வரலாற்றில் ஒரு இன்னிங்ஸில் பட்ஸ்மேன் ஒருவர் எடுத்த அதிகபட்ச ரன்கள் இது வாகும். கப்டன் ஹஷ்மதுல்லா 40, அஸ்மதுல்லா 41, நபி 40 ரன்கள் எடுத்தனர்.

ஆப்கான் அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 325 ரன்கள் எடுத்தது. 326 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இங்கிலாந்து அணி விரட்டியது.

சால்ட் 12, ஜேமி ஸ்மித் 9 ரன்கள் எடுத்து வெளியேறினர். ரூட் உடன் பென் டக்கெட் இணைந்து 68 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்தார். டக் கெட் 38 ரன்களில் ரஷித் கான் சுழலில் எல் பி டபிள்யூ முறையில் விக்கெட்டை இழந்தார்.


புரூக் 25, கப்டன் பட்லர் 38, லிவிங்ஸ்டன் 10 ரன்கள் எடுத்தனர். 111 பந்துகளில் 120 ரன்கள் எடுத்து சதம் எடுத்திருந்தார் ஜோ ரூட். ஓவர்டன் 32, ஆர்ச்சர் 14 மற்றும் ரஷீத் 5 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். இதன் மூலம் 49.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 317 ரன்கள் எடுத்து தோல்வியை தழுவியது.

ஆப்கான் பந்துவீச்சில் அஸ்மத் துல்லாஹ் உமர்சாய் 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இதன் மூலம் பாகிஸ்தான், பங்களாதேஷ் உள்ளிட்ட அணிகளை அடுத்து தொடரிலிருந்து இங்கிலாந்து வெளியேறி உள்ளது. ஆட்ட நாயகன் விருதை இப் ராஹிம் சத்ரான் வென்றார்.

குரூப் - ஏ பிரிவில் இந்தியா மற்றும் நியூஸிலாந்து அணிகள் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளன. குரூப் - பி பிரிவில் அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் அரை இறுதிக்கு முன்னேற ஒரே ஒரு வெற்றி மட்டுமே தேவையாக உள்ளது. (6-8)

# ஆஸி. சுழற்பந்து வீச்சாளர் மேத்யூக்கு பந்து வீச அனுமதி

### ஐ.சி.சி அறிவிப்பு



சந்தேகத்திற்குரிய பந்து வீச்சு பாணி தொடர்பில் குற்றம் சாட்டப்பட்ட அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் மேத்யூ குஹ்னெமனுக்கு சர்வதேச கிரிக்கெட்டில் மீண்டும் பந்து வீச சர்வதேச கிரிக்கெட் பேரவை அனுமதி அளித்துள்ளது.


அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேனில் இடம்பெற்ற பந்து வீச்சு சோதனையில் அவரது பந்துவீச்சு சரியானது என்பது உறுதி செய்யப்பட்டதை அடுத்து இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சோதனையில் அவரது முழங்கை 15 டிகிரி வரம்பிற்குள் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரில் அவரது பந்து வீச்சு பாணியில் சந்தேகம் இருப்பதாகக் கூறப்பட்டது.

இந்தத் தொடரை அவுஸ்திரேலிய அணி 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இந்த தொடரில் மேத்யூ குஹ்னெமன் 16 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# சென்னை வந்த டோனி
## சேப்பாக்கத்தில் இரு ஆட்டங்கள்



இந்தியன் பிரீமியர் லீக்கின் 18 ஆவது சீசன் மார்ச் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதில், சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தனது முதல் இரு ஆட்டங்களில் மும்பை இந்தியன்ஸ், ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகளுடன் சேப்பாக்கத்தில் மோதுகிறது.

சேப்பாக்கத்தில்தான் தனது கடைசி ஐ.பி.எல் போட்டி என முன்பே டோனி குறிப்பிட்டதற்கு ஏற்றவாறு கடந்த சீசனில் வாய்ப்பு அமைந்தது. டோனியும், கிரிக்கெட்டில் தான் அறிமுகமான போது இருந்த தோற் றத்துடன் நீண்ட முடியுடன் கள மிறங்கினார்.

ஆனால், சென்னை அணியினால் பிளே ஆஃப் சுற்றுக்கு முன்னேற முடியாததால், சேப்பாக்கத்தில் நடைபெற்ற பைனலில் விளையாட முடியாமல் போனது. டோனியும் இனி ஐ.பி.எல் விளையாடுவாரா என்ற எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஐ.பி.எல் மெகா ஏலத்துக்கு முன்பாக இன்னும் சில ஆண்டுகள் விளையாட விரும்புவதாகக் கூறி, 2025 ஐ.பி.எல்லில் தான் விளையாடுவதை உறுதிசெய்தார் டோனி.

இவ்வாறிருக்க, ஐ.பி.எல் தொடங்குவதற்கு இன்னும் மூன்று வாரங்களே இருக்கும் நிலையில் டோனி இன்று சென்னை வந்திறங்கினார். சென்னை அணி நிர்வாகமும், விமான நிலையத்திலிருந்து டோனி வெளியே வரும் புகைப் படத்தை இன்ஸ்டாகிராமில் பதிவிட்டிருக்கிறது.

இந்த நிலையில், அந்தப் புகைப் படத்தில் டோனி அணிந்திருக்கும் ரிஷேர்ட்டில் அச்சிடப் படப்பட்டிருக்கும் கோட் வேர்ட் (Morse Code) அனைவரின் கவனத்தை ஈர்த்திருக்கிறது.

அதற்குக் காரணம், கடைசியாக ஒருமுறை (One Last Time) என்பதைத் தான் அந்த கோட் வேர்ட் குறிக்கிறது. இதனால், தனது கடைசி ஐ.பி.எல் சீசன் இதுதான் என்று டோனி சொல்கிறாரா இல்லை, வெறுமனே விளம்பரத்துக்காக அப்படி போட்டிருக்கிறாரா என்று சமூக வலைத்தளங்களில் ரசிகர்கள் மத்தியில் விவாதங்கள் ஆரம்பித்திருக்கின்றன. (6-8)

# மழையால் கைவிடப்பட்ட
## பாகிஸ்தான்-பங்களாதேஷ் போட்டி




சம்பியன்ஸ் டிராபியில் பாகிஸ்தான் - பங்களாதேஷ் போட்டி மழையால் நேற்று கைவிடப்பட்டது.

சம்பியன்ஸ் டிராபி பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டு தங்களுக்குள் மோதுகின்றன.

இதில் ராவல்பிண்டியில் 9 ஆவது லீக் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் பாகிஸ்தான் - பங்களாதேஷ் ஆகிய அணிகள் நேற்று மோத இருந்தனர்.

ஆனால் அங்கு மழை பெய்வதன் காரணமாக டாஸ் போடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து மழை பெய்ததால் ஆட்டம் கைவிடப்பட்டதாக நடுவர்கள் அறிவித்தனர்.

இரு அணிகளும் தங்களது முதல் 2 ஆட்டங்களில் தோல்வியடைந்து விட்டதால் ஏற்கனவே அரை இறுதிக்கு தகுதிபெறும் வாய்ப்பை இழந்து விட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> மனதில் நேர்மை இருந்தால், நீங்கள் கூற விரும்புவதை எப்படிக் கூறுவது எனக் கவலைப்படத் தேவையில்லை.
> ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தசரதர் இருந்த சிம்மாசனத்தில் பாதுகை இருந்தது ஏன்?

இராமபிரானின் பட்டாபிஷேகம் தடைப்பட்டு போகிறது. இராமர், சீதா, இலக்குவணன் ஆகியோர் வனவாசம் செல்கின்றனர்.

தன் மகன் இராமன் காடேகினான் என்ற செய்தியறிந்த தசரதர் மரணித்து விடுகிறார்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்க பரதன் மறுக்கிறான்.

இராமரைத் தேடிச் சென்று அவரின் பாதணிகளைப் பெற்று வந்து, சிம்மாசனத்தில் வைத்து 14 ஆண்டுகள் ஆட்சி நிர்வாகத்தைக் கவனிக்கிறான்.

மாமன்னனாகிய தசரதச் சக்கரவர்த்தி அமர்ந்திருந்த சிம்மாசனத்தில் 14 ஆண்டுகள் பாதுகையே இருந்தது எனும்போது அதற்கான காரணம் என்ன என்பதை அறிய வேண்டிய தேவை ஏற்படும்.

அவ்வாறு காரணத்தை அறிய முற்படும்போது தசரதரின் குடும்பத்துக்குள் ஏற்பட்ட குழப்பமே அனைத்துக்கும் காரணம் என்பது தெரியவரும்.

ஆம், இப்போது எங்கள் தமிழர் தேசத்தில் உள்ள குறிப்பிட்ட அரச திணைக்களங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் உள்ளக முரண்பாடுகள் தலைவிரித்தாடத் தொடங்கியுள்ளன.

வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு எதிராக மருத்துவர்கள், பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு எதிராக ஒரு தரப்பு விரிவுரையாளர்கள், அதிபருக்கு எதிராக ஆசிரியர்கள், ஆசிரியருக்கு எதிராக மாணவர்கள், திணைக்களத் தலைவருக்கு எதிராகப் பணியாளர்கள் என்றவீறு உள்ளக முரண்பாடுகள் வெளிப்படுவதைக் காண முடிகிறது.

குறிப்பாக பணிப்புறக்கணிப்பு, ஆர்ப்பாட்டம், அடையாள வேலைநிறுத்தம் என்பதாக அவை வெளிப்படுகின்றன.

இவ்வாறு உள்ளக ரீதியில் எழுகின்ற முரண்பாடுகள் பணிப்புறக்கணிப்பாக மாறும் போது, குறித்த நிர்வாகக் கட்டமைப்பு குழம்பிப் போவதுடன் எதிர்காலத்தில் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவருக்கு பணியாளர்கள் கட்டுப்படாத துர்ப்பாக்கிய நிலைமை குறித்த அரச அமைப்பில் ஏற்படும் சாத்தியம் உண்டு.

இத்தகைய நிலைமைகள் ஓர் இலக்கை நோக்கிப் பயணிக்கின்ற அரசாங்கத்தைத் திசை திருப்புவதாக இருக்கும்.

இதனால் இந்த நாட்டின் அபிவிருத்தி, பொருளாதார முதலீடு, இன ஒற்றுமை என்ற தேசிய விடயங்களைக் கவனிக்க முடியாத சூழமைவும் ஏற்படவே செய்யும்.

உண்மை. இப்போதுகூட, யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் நிர்வாகத்துக்கு எதிராக, அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தலைப்பட்டுள்ளதான தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேநேரம் நாடளாவிய ரீதியில் தாதியர்கள் சம்பள உயர்வு போதாது எனக் கூறி அடையாளப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறான நிலைமைகள் அரசாங்கத்துக்குத் தலையிடியைக் கொடுப்பதாக அமையும்.

எனவே சம்பந்தப்பட்ட தரப்புகள் உள்ளக முரண்பாடுகளைத் தம்மளவில் பேசித் தீர்த்துக் கொள்வதுதான் முன்னேற்றகரமான செயற்பாடாக இருக்கும்.

இதைச் செய்யாத விடத்து, எங்கெங்கு உள்ளக முரண்பாடுகள் சிக்கல்களாக வெளிப்படுகின்றனவோ அங்கெல்லாம் அயோத்தியின் 14 ஆண்டுகால நிலைமையே ஏற்படும். கவனம்.

## 9 மாதங்களில் முன்னாள் சபாநாயகர் வாகனங்களைப் பயன்படுத்தியுள்ளார்

### எரிபொருளுக்கு மாத்திரம் ரூ.33 இலட்சம் செலவு சபையில் வெளிக் கொணர்ந்தார் பிமல் ரத்நாயக்க

(கொழும்பு)

முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன 2024 ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களில் மட்டும் 9 வாகனங்களை பயன்படுத்தியுள்ளதுடன் இந்த வாகனங்களுக்கு எரிபொருளுக்காக 33 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இதனூடாகப் பொருளாதார நெருக்கடியின் போதும் கடந்த அரசாங்கம் அநாவசியச் செலவுகளைக் குறைத்துக் கொள்ளவில்லை என்பது தெரியவருவதாக சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க சபைக்குத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் ஜனாதிபதி செலவினத்தலைப்பு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

மேலும் முன்னாள் பிரதி சபாநாயகர் 6 வாகனங்களைப் பயன்படுத்தியுள்ளார். 9 மாதங்களுக்கு 135 இலட்சம் ரூபா செலவிடப்பட்டள்ளது.

முன்னாள் பிரதிக் குழுக்களின் தலைவர் 4 வாகனங்களைப் பயன்படுத்தியதோடு அதற்காக 72 இலட்சம் ரூபாயை எரிபொருளுக்காக செலவிடப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தின் ஆளும் தரப்பின் பிரதம கொறடா, சபை முதல்வர் அலுவலகம் ஆகியவற்றின் செலவுகளை இயலுமான வகையில் குறைத்துள்ளோம்.

அரச செலவுகளைக் குறைக்கும் செயற்பாடுகளை அரசாங்கத்துக்குள் இருந்தே முன்னெடுத்துள்ளோம் என்றார். (ம-7)

### புதுக்குடியிருப்பு ஆனந்தபுரத்தில்

## கசிப்புடன் ஒருவர் கைதாகி மறியலில்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் பகுதியில் விற்பனைக்குத் தயாராக இருந்த கசிப்புடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, விற்பனை இடம்பெறுவதாகப் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.பி.ஆர்.ஹேரத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து நேற்று முன்தினம் மாலை குறித்த இடத்திற்குச் சென்ற பொலிஸாரால் 20 லீற்றர் கசிப்பு விற்பனைக்குத் தயாராக இருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்தோடு சந்தேகத்தின் பேரில் புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் பகுதியில் வசிக்கும் 34 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபரை நேற்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய போது மார்ச் மாதம் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ம-7,299)

## புதிய அரசியல் கட்சிகளை இன்று முதல் பதிவு செய்யலாம்

தேர்தல்கள் ஆணைக்குழு

2025 ஆம் ஆண்டு அரசியல் கட்சிகளாக அங்கீகரிப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் இன்று முதல் அடுத்த மாதம் 28 ஆம் திகதி பிற்பகல் 03.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கட்சியின் செயலாளரால் கையொப்பமிடப்பட்டு விண்ணப்பப்படிவங்களை மேற்குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தேர்தல்கள் ஆணைக்குழு, தேர்தல்கள் செயலகம், சரண மாவத்தை, இராஜகிரிய, 10107 என்ற முகவரிக்குத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பப் படிவத்துடன் கட்சியின் யாப்பு, கட்சியின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்றுக்கள், கட்சியின் நிகழ்கால கொள்கைப் பிரகடனம், கட்சியின் பதவித் தாங்குநர்களின் குழுவிற்கு குறைந்தபட்சம் ஒரு பெண் உறுப்பினர் உள்ளடங்கப்படுதல் மற்றும் அரசியல் கட்சியாக இயங்கியுள்ளமையை நிரூபிப்பதற்கான ஆவணங்கள் ஆகியவற்றின் நிழற்படப் பிரதிகளும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)

## அர்ஜுன மகேந்திரனை நாடு கடத்த முடியாது

### சிங்கப்பூர் தெரிவிப்பு

மத்தியவங்கி பிணைமுறிமோசடி குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை சிங்கப்பூர் இலங்கைக்கு நாடு கடத்துவதற்கு மறுத்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் இடம்பெற்ற மத்தியவங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடையவர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் மத்திய வங்கி ஆளுநரை நாடு கடத்துவதற்கான வேண்டுகோளை இலங்கை சட்டமாஅதிபர் திணைக்களம் விடுத்திருந்தது.

எனினும் சிங்கப்பூரின் சட்டங்களின் கீழ் இலங்கைக்கு அவரை நாடு கடத்த முடியாது என சிங்கப்பூரின் சட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலஞ்சஊழல் தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழு தாக்கல் செய்த வழக்கினைத் தொடர்ந்து 2025 பெப்ரவரி 25ம் திகதி முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் நீதிமன்றில் ஆஜராக வேண்டும் எனக் கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அத்துடன் மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி வழக்குத் தொடர்பில், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனைக் கைது செய்யுமாறு, கொழும்பு நிரந்தர ட்ரயல்-அட்-பார் பெஞ்ச் ஏற்கனவே இன்டர்போல் மூலம் பிடியாணை பிறப்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் கடந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தின்போது அநுர குமார திஸாநாயக்க அர்ஜுன மகேந்திரனை நாட்டிற்கு கொண்டு வருவேன் என வாக்குறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பிமல் - ஹக்கீம் இடையே கடும் வாதப் பிரதிவாதம்

(கொழும்பு)

அமைச்சர் பிமல் ரத்நாயக்கவுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்குமிடையில் பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

சபைத் தலைவர் பிமல் ரத்நாயக்க, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அறிவுறுத்தல்களைப் புறக்கணித்து ஒரு தலைப்பட்சமாகச் செயற்பட்டதாகப் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் குற்றம் சுமத்தினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,"தான் உட்பட பல கட்சித் தலைவர்கள் வேண்டுமென்றே பாராளுமன்ற அலுவல் பற்றிய குழுவிலிருந்து வெளியேற்றப்பட்டோம்.

ஜனாதிபதி என்னை பாராளுமன்ற அலுவல் பற்றிய குழுவில் இணைத்துக் கொள்ளவதாக உறுதியளித்திருந்தார்


ஜனாதிபதி உறுதியளித்தும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு எனக்கு அனுமதி வழங்கவில்லை" என்றார்.

எவ்வாறாயினும் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமின் கூற்றுக்கு மறுப்புத் தெரிவித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க அவரின் குற்றச்சாட்டையும் என்சார்ட் அறிக்கையிலிருந்து நீக்குமாறு தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியுற்ற நாடான பாகிஸ்தானின் அறிவுரை யாருக்கும் தேவையில்லை

## ஐ.நாவில் சினந்த இந்தியா



(ஜெனீவா)

ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசங்கள் எப்போதும் இந்தியாவின் ஒருங்கிணைந்த மற்றும் பிரிக்க முடியாத பகுதியாகவே இருக்கும் என இந்தியத் தூதர் க்ஷிதிஜ் தியாகி தெரிவித்தார்.

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்சில் கூட்டம் நடைபெற்றது. இதில் ஜம்மு காஷ்மீர் குறித்து பேசிய பாகிஸ்தானுக்கு இந்தியா பதிலடி கொடுத்தது.

ஐ.நா கூட்டத்தில் பேசியிருந்த பாகிஷ்தானின் மனித உரிமைகள் அமைச்சர் அசாம் நசீர், காஷ்மீரில் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும் அது நிறுத்தப்பட வேண்டும் என்றும் கூறியிருந்தார். மக்களின் சுய நிர்ணய உரிமை தொடர்ந்து மறுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு பதிலளிக்கும் விதமாகக் கூட்டத்தில் பேசிய இந்தியத் தூதர் க்ஷிதிஜ் தியாகி, பாகிஸ்தானின் தலைவர்கள், அதிகாரிகள் அந்த நாட்டின் இராணுவ பயங்கரவாதத்தினர் எழுதிக் கொடுக்கும் பொய்களை பரப்புவதைப் பார்ப்பது வருத்தம் அளிக்கிறது.

இந்த கவுன்சிலின் நேரத்தை, சர்வதேச உதவிகளை நம்பி வாழும் ஒரு தோல்வியுற்ற அரசு தொடர்ந்து வீணடிப்பது துரதிர்ஷ்டவசமானது.

பாகிஸ் தானின் கருத்துக்கள் அதன் பாசாங்குத்தனத்தையும் அதன் மனிதாபிமானமற்ற செயல்களையும் அதன் திறமையின்மையையும் வெளிப்படுத்துகின்றன.

இந்தியா ஜனநாயகம், முன்னேற்றம் மற்றும் அதன் மக்களின் கண்ணியத்தை உறுதி செய்வதில் கவனம் செலுத்துகிறது. இவை பாகிஸ்தான் கற்றுக்கொள்ள வேண்டிய மதிப்புகள் ஆகும்.


சர்வதேச தளங்களை தவறாகப் பயன்படுத்தி இந்தியாவுக்கு எதிரான பேச்சுக்களை பாகிஸ்தான் தாண்டி வருகிறது. அதே நேரத்தில் அதன் சொந்த உள்நாட்டு நெருக்கடிகளைத் தீர்க்கத் தவறிவிட்டது.

ஒரு நாடாக, பாகிஸ்தான் மனித உரிமைகளை மீறுவதன் மூலமும் சிறுபான்மையினரை ஒடுக்குவதன் மூலமும், ஜனநாயக விழுமியங்களைப் புறக்கணிப்பதன் மூலமும் தனது கொள்கைகளைத் திணிக்கிறது.

ஐ.நா சபையால் பயங்கரவாதிகள் என்று அறிவிக்கப்பட்டவர்களுக்குப் பாகிஸ்தான் வெட்கமின்றி அடைக்கலம் அளிக்கிறது.

எனவே பாகிஸ்தான் யாருக்கும் உபதேசம் செய்யும் தகுதி நிலையில் இல்லை என்று தெரிவித்தார். (நி-8)

# கரை ஒதுங்கிய Doomsday மீன் பேரழிவின் அறிகுறியா?



(மெக்சிகோ)

மெக்சிகோ கடற்கரையில் அரியவகை மீனான DoomsDay மீன்கள் கரையொதுங்கியுள்ளமை மக்களிடையே பெரும் பயத்தை ஏற்படுத்தியுள்ளது.

பொதுவாக இயற்கை பேரழிவுகளை முன்கூட்டியே கண்டுபிடிக்கும் திறன்களை உயிரினங்கள் கொண்டுள்ளன.

யானைகள், நாய்கள், பறவைகள் மற்றும் எறும்புகள் உட்பட பல உயிரினங்களுக்கு இந்தக் குணம் உள்ளது. இவை வரப் போகும் பேரழிவுகளை முன்கூட்டியே தெரிந்து கொண்டு அதனை தமது அசாதாரண நடத்தைகள் மூலம் வெளிப்படுத்துகின்றன.

இயற்கைப் பேரழிவை பற்றிய ஒரு முன்கூட்டிய எச்சரிக்கையை மனிதர்களுக்கும் கொடுக்கின்றன. வளர்ந்து வரும் அறிவியலும் கூட பல்வேறு நேரங்களில் இதனை உறுதிப்படுத்தி உள்ளன.

இந்நிலையில் தான் மெக்சிகோ கடற்கரையில் ஒதுங்கும் அரியவகை மீன்களான DoomsDay மீன்கள் பல நாடுகளை கவலையில் ஆழ்த்தி உள்ளன.

DoomsDay மீன்கள் கரை ஒதுங்கினால் இயற்கைப் பேரழிவு ஏற்படப் போவதாக அர்த்தமாம். குறித்த மீன் நீளமான ரிபன் போன்ற உடலமைப்பைக் கொண்டுள்ளது. ஓரேஞ் நிற துடுப்புகளையும் கொண்டுள்ளது.

மெல்லிய உடலைக் கொண்ட இந்த மீன்கள் ஆழ்கடலில் மட்டுமே வாழக்கூடியதாகும். அதாவது 656 அடி முதல் 3280 அடி ஆழத்தில் தான் இவை வாழ்கின்றது.

ஜப்பானிய புராணக் கதைகளில் குறித்த மீன்களை கடவுளின் தூதர்கள் என்று கூறுகின்றனர். அதாவது இயற்கை பேரழிவு வருவதற்கு முன் கூட்டி இந்த மீன்கள் கரையொதுங்கும் என்று கூறுகின்றனர்.

கடந்த 2011 ஆம் ஆண்டு ஜப்பானில் ஏற்பட்ட மிகப்பெரிய பேரழிவில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். இந்தப் பேரழிவு ஏற்படுவதற்கு சில தினங்களுக்கு முன்பு தான் சுமார் 20 DoomsDay மீன்கள் இறந்து கரையொதுங்கியது குறிப்பிடத்தக்கது. (நி-8)

# இராணுவ பட்ஜெட்டை பாதியாக குறைக்கலாம்

## ட்ரம்பின் பரிந்துரையில் இணைய விரும்பாத சீனா

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்காவின் செலவீனங்களை குறைக்க முடிவு செய்துள்ளார். இதனால் வெளிநாடுகளுக்கு வழங்கப்படும் நிதியுதவியை நிறுத்த உத்தரவிட்டுள்ளார்.

நேட்டோ அமைப்பில் உள்ள அனைத்து நாடுகளும் சமஅளவில் நிதியளிக்க வேண்டும். அமெரிக்கா அதிக அளவில் நிதி வழங்காது என ட்ரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார்.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி புடின் ஆகியோரை சந்தித்து பேசும் போது, நம்முடைய இராணுவ பட்ஜெட்டை பாதியாக குறைக்கலாம் என அவர்களிடம் சொல்ல விரும்புவேன் என ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் ரஷ்ய ஜனாதிபதி புடின் கருத்து தெரிவிக்கையில் "இது சிறந்த யோசனை என நினைக்கிறேன். அமெரிக்கா முதலில் 50 சதவீதம் குறைக்க வேண்டும். பின்னர் நாங்கள் 50 சதவீதம் குறைப்போம். அதன்பின் சீனா விரும்பினால், கட்டாயம் இணையும்" எனத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் ட்ரம்பின் பரிந்துரையில் இணைய விரும்பவில்லை என சீனா தெரிவித்துள்ளது. இது தொடர்பாக சீனாவின் வெளியுறவுத்துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் லின் ஜியான் கூறுகையில், "சீனா அமைதியான வளர்ச்சிக்கு உறுதிபூண்டுள்ளது. ஆனால் அதன் வரையறுக்கப்பட்ட பாதுகாப்பு செலவீனம், இறையாண்மை மற்றும் வளர்ச்சி நலன்களைப் பாதுகாப்பதாகும்.

சீனா ஒரு தற்காப்பு உத்தியை கொண்டுள்ளது. பொருளாதாரம் மற்றும் தேசிய பாதுகாப்புக்கு இடையில் ஒருங்கிணைந்த வளர்ச்சியைப் பின்பற்றுகிறது.

மேலும் எந்த நாட்டுடனும் ஒருபோதும் ஆயுதப் போட்டியில் ஈடுபடுவதில்லை." எனத் தெரிவித்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூ.3,572 மில்லி...

செய்துள்ளார் எனப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று வியாழக் கிழமை உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார்.

ஒவ்வொரு முன்னாள் ஜனாதிபதிகளின் வெளிநாட்டுப் பயணங்களுக்காகச் செலவிடப்பட்ட பணம் குறித்து பிரதமர் பின்வருமாறு தகவல் வெளியிட்டார். அதன்படி,

மகிந்த ராஜபக்ஷ 2010 முதல் 2014 வரை - 3,572 மில்லியன் ரூபாய்.

மைத்திரிபால சிறிசேன - 2015 முதல் 2019 வரை - 384 மில்லியன் ரூபாய்.

கோட்டாபய ராஜபக்ஷ - 2020 முதல் 2022 வரை - 126 மில்லியன் ரூபாய்.

ரணில் விக்கிரமசிங்க - 2023 மற்றும் 2024 வரை - 533 மில்லியன் ரூபாய்

அநுர குமார திஸாநாயக்க - செப்ரெம்பர் 2024 முதல் பெப்ரவரி 2025 வரை - 1.8 மில்லியன் ரூபாய்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் 2013ஆம் ஆண்டில் அதிகளவு நிதி செலவு செய்யப்பட்டுள்ளதாகவும், இது 1,144 மில்லியன் ரூபாய் என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார். (ம-7)

## வன்முறையில்...

மரணச்சடங்கு நிகழ்வில் சில இளைஞர்களிடையே முரண்பாடு ஏற்பட்டது. இதுகுறித்து வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு பொலிஸார் வருகை தந்ததும் சிலர் தப்பிச் சென்ற நிலையில், 3 இளைஞர்கள் வாளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## அரச வாகனங்...

யில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது பொதுச் சேவை செலவுகளைக் குறைக்க அனைத்து அரசு அலுவலகங்களையும் அரசு கட்டிடங்களுக்குள் கொண்டு வருவதன் அவசியம், பயன்படுத்தப்படாத அலுவலக உபகரணங்களை அகற்றுதல், மூடப்பட வேண்டிய, ஒன்றிணைக்கப்பட வேண்டிய மற்றும் தனியார் உரிமைக்கு மாற்றப்பட வேண்டிய நிறுவனங்களை அடையாளம் கண்டு அதற்கான அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் ஜனாதிபதி கவனம் செலுத்தினார். (ம-7)

## ஜப்பானுக்கு...

விடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடனான சந்திப்பின் போது இலங்கைக்கான ஜப்பான் தூதர் அகியோ இசோமாட்டா இந்த அதிகாரபூர்வ அழைப்பை விடுத்தார். (ம-7)

## இனப் பிரச்சினை...

பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டதன் பின்னரே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் மக்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வையே எதிர்பார்த்துள்ளனர் என்றார். (ம-7)

## யாழ்.போதனா...

காத சிகிச்சைப் பிரிவுகளும் வழமை போல இயங்கின. (ம-7)

## மக்கள் அனைத்...

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் ஜனாதிபதி செலவினத் தலைப்பு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

ஒருசில அரச நிறுவனங்கள் பொறுப்புடன் செயற்படுவதில்லை. ஒரு சில நிறுவனங்கள் தமது பொறுப்பு என்னவென்று தெரியாமலே செயற்படுகின்றன. நிதி மோசடி காரணமாகவே நாடு வங்குரோத்து நிலையடைந்தது. இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு முறையாக செயற்பட்டுள்ளதா? என்பதை ஆராய வேண்டும். சிறு அளவிலான மோசடிகள் தொடர்பில் கவனம் செலுத்திய இலஞ்ச ஊழல் ஆணைக்குழு பெருமளவிலான மோசடிகளைக் கவனத்திற்கொள்ளவில்லை. இதுவும் வங்குரோத்து நிலைக்கு ஒரு காரணமாகும்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு பொறுப்புடன் செயற்பட வேண்டும். பாரிய போராட்டத்தின் பின்னர்தான் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு சுயாதீனமாக்கப்பட்டது. ஆகவே ஆணைக்குழு பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்துகிறோம். ஒருசில நிறுவனங்களின் செயற்பாடுகள் மற்றும் நிதி செலாற்றுகை முழுமையாக ஆய்வு செய்யப்பட வேண்டும்.

சிறந்த அரச நிர்வாகத்தை அரசாங்கத்தால் மாத்திரம் தனித்து முன்னெடுக்க முடியாது. அரச நிறுவனங்கள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நாட்டு மக்கள் இன்று அனைத்துக்கும் கேள்வி கேட்கிறார்கள்.

ஆகவே 225 பாராளுமன்ற உறுப்பினர்களைப் போன்று, அரச உத்தியோகத்தர்களும் அதிகாரிகளும் மக்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய வகையில் செயற்பட வேண்டும். இது மிகவும் முக்கியமானது.

அரசியல்வாதிகளை மக்கள் விமர்சிக்கிறார்கள். ஐந்தாண்டு பதவிக்காலம் முடிவடைந்ததன் பின்னர் அரசியல்வாதிகள் மக்கள் மத்தியில் செல்வார்கள். ஆனால் அரச அதிகாரிகள் அவ்வாறில்லை. பதவியிலிருந்து ஓய்வுபெறும்வரை மக்கள் மத்தியில் அரச அதிகாரிகள் செல்வதில்லை. ஆகவே அரச அதிகாரிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுப்போம். தேவையான மானியங்களை வழங்குவோம் என்றார். (ம-7)

## தபால் ஊழியர்...

பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சிவராத்திரி தினமான நேற்று முன்தினம் அவரது மனைவி காரைநகர் சிவன் கோவிலுக்குச் சென்றுவிட்டு நேற்று வந்து பார்த்தபோது கதிரையில் சடலமாகக் காணப்பட்டார்.

இது தொடர்பான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

### மஹஜன சம்பத
திகதி 2025.02.27
சீட்டிழுப்பு இலக்கம் 5760
E 6 1 4 0 7 9
அத சம்பத
E 4 0 7 9
சீட்டிழுப்பு இலக்கம் 0335
National Lotteries Board

### தன நிதானய
திகதி - 2025.02.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1790
P 18 45 65 79 P
Double Chance 69762

### மெகா பவர்
திகதி 27/02/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2108
N 12 12 17 18 30

### ஜய
திகதி 2025.02.27
சீட்டிழுப்பு இலக்கம் 028
K 4 7 4 6

### கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4002
சீட்டிழுப்பு திகதி 27.02.2025
O 16 62 66 73
O

### ஹந்தஹன (HANDAHANA)
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.02.27
சீட்டிழுப்பு இலக்கம் 1069
துலாம் 12 15 16 45 துலாம்
92073 38

### சுபிரி டன சம்பத
உத்தியோகபூர்வ முடிவுகள்
27.02.2025 வெற்றி வாரம் 468
J 0 7 0 6 8 3
79291
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.32,002,004.40

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2734
சீட்டிழுப்பு திகதி 2025.02.27 தினம் வியாழக்கிழமை
40 45 47 65 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 88,970,816.00

### சனிதா
திகதி 27.02.2025 வெற்றி வாரம் 4895
51 52 66 76 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,016,916.40
76717

### சசிரி
வெற்றி வாரம் 631
சீட்டிழுப்பு திகதி 27.02.2025
வியாழக்கிழமை
01 20 32
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00

### ராசி
சீட்டிழுப்பு வாரம் 4446
சீட்டிழுப்பு திகதி 27.02.2025 தினம் வியாழக்கிழமை
17 25 36 53 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.15,068,384.80
125523

### கப்ருக
B 24 04 29 31 43
சீட்டிழுப்பு வாரம் 1910
27.02.2025 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.566,791,783.00

### அத கோட்டிபதி (ADA KOTIPATHI)
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2560
சீட்டிழுப்பு திகதி : 2025.02.27
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.75,384,782.40
26 28 67 72 H
166144

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2341)

076 825 7716 (ஆகாஸ்)

**குடைச்சுவாமி சேவை நாடி ஜோதிடம்**

அன்பானவர்களே

உங்களது வீட்டின் வாஸ்து பார்க்கவும், தீய சக்திகளை இனம் காணவும் சாதக பலன் பார்க்கவும் தொடர்பு கொள்ள அழைக்கவும். (3503)

077 491 1975, 077 477 9925

**கிழவன்காடு கலாமன்றம்**

காரைநகர் - யாழ். கிளை நடாத்தும்

**ஸ்தாபக தின நிகழ்வு** (ஸ்தாபிதம் - 01.03.2002)

**அழைப்பு**

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு காரைநகர்.

காலம் : 01.03.2025 சனிக்கிழமை பி.ப 4.00 மணி

தலைமை : திரு.ந.சோதிநாதன் அவர்கள் (ஸ்தாபகரும் தலைவரும், கிழவன்காடு கலாமன்றம்)

பிரதம விருந்தினர் : பேராசிரியர் S.சிவலிங்கராஜா அவர்கள் (முன்னாள் தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

கௌரவவிருந்தினர் : "கலைமாடக்கோன்"
திரு. திருமதி. சிவஞானம் உமாதேவி தம்பதியினர் (கௌரவ உறுப்பினர், கிழவன்காடு கலாமன்றம்)

நிகழ்ச்சிகள்

- மன்றக் கொடியேற்றல், மன்றக் கீதம் இசைத்தல்
- ஸ்தாபக தினஉரை
- "சிதம்பரஜோதி" உயர்விருது வழங்கல்
- இசைக்கச்சேரி :- விஸ்வ பிரசன்ன சிவாச்சாரியார், நல்லூர்
- குழுஇசை :- கலாமன்ற இசைத்துறையினர் (நெறியாள்கை :- "திருவாசகக்குயில்" காரை லீலாவதி இராசரத்தினம் - கலாமன்ற இசை ஆசிரியர்)
- மிருதங்க இசை :- கலாமன்ற மிருதங்கத் துறையினர் (நெறியாள்கை : "நயன செவ்வேள்" சின்னையா துரைராசா - கலாமன்ற மிருதங்க ஆசிரியர்)
- நாட்டியாஞ்சலி :- கலாமன்ற நடனத் துறையினர் (நெறியாள்கை:- "நாட்டியவித்தகன்" "முதுகலைமாணி" ஆனந்தகிருஸ்ணன் ஸ்ரீகாந்த் "முதுகலைமாணி" கணேசலிங்கம் பவன் - கலாமன்ற நடன ஆசிரியர்கள்)

(C-2344)

கிழவன்காடு கலாமன்றம் வழங்கும்
"சிதம்பர ஜோதி" உயர் விருது பெறுபவர் -2025
ஈழத்தின் முதுபெரும் நடனக் கலைஞர்
ஸ்ரீமதி.சாந்தினி சிவனேசன் அவர்கள்



குறிப்பு : நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ் கிளையிலிருந்து 428 (வண்ணை சிவன் கோவில் அருகாமை) பி.ப 3.30 மணிக்கு ஆரம்பமாகும்.
"சிதம்பரஜோதி" உயர் விருதினை பெற்றுக் கொள்ளும் ஸ்ரீமதி, சாந்தினி சிவனேசன் அவர்களை கௌரவம் செய்ய விரும்புமுள்ள கலைஞர்கள் மற்றும் கலாரசிகள் கௌரவம் செய்து சிறப்பிக்கலாம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கிழவன்காடு கலாமன்றம் காரைநகர் - யாழ். கிளை

# அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் ஜனாதிபதி அநுரவுடன் கலந்துரையாடல்

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருக்கு இடையிலான சந்திப்பொன்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

வைத்தியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்கு அமைவாக இம்முறை வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் தொடர்பிலும் தொழில்சார் செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது வைத்தியர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் தொழில்சார் செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது வைத்தியர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாரநாயக்க, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைவர் வைத்தியர் சஞ்சீவ தென்னகோன், செயலாளர் வைத்தியர் பிரபாத் சுகதாச உள்ளிட்ட அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் பலரும் இதில் கலந்துகொண்டனர். (ம-7)

# இலங்கையின் துறைமுகங்களை அண்மித்த முதலீடுகளுக்குத் தயார்

## ஜனாதிபதியிடம் நெதர்லாந்துத் தூதுவர்



(கொழும்பு)

இலங்கையின் துறைமுகங்களை அண்மித்த முதலீடுகளுக்கு நெதர்லாந்து தயாராக உள்ளதென இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதுவர் பொனி ஹோர்பஷ் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க மற்றும் இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதுவர் பொனி ஹோர்பஷ் ஆகியோருக்கு இடையில் நேற்று (27) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டது.

இலங்கை மற்றும் நெதர்லாந்துக்கு இடையில் காணப்படும் நீண்டகால நட்புறவை பலப்படுத்திக் கொள்வது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கையின் சுற்றுலா, துறைமுகம், முதலீட்டுத் துறைகளின் முன்னேற்றத்துக்கு நெதர்லாந்து அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொடுக்கக் கூடிய ஒத்துழைப்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் கலாச்சார மற்றும் தொல்லியல் பெறுமதியான படைப்புக்களை பாதுகாத்தல், கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஆய்வுகள் மற்றும் இலங்கையின் கல்வி மற்றும் பயிற்சிகளுக்கு நெதர்லாந்து அரசாங்கத்தின் ஒத்துழைப்பை வழங்கவும் இதன்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சுற்றுலா, துறைமுகச் செயற்பாடுகள் மற்றும் முதலீடுகளில் நெதர்லாந்து அரசாங்கத்தின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதியின் முன்மொழிவுகளை பாராட்டிய தூதுவர் "கிளீன் ஸ்ரீலங்கா" வேலைத்திட்டத்தை புதிய நிலைக்குக் கொண்டு செல்ல நெதர்லாந்து அரசாங்கத்தினால் வழங்கக் கூடிய ஒத்துழைப்பு குறித்தும் கலந்துரையாடினார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே, நெதர்லாந்து பிரதித் தூதுவர் இவான் ரூஜெனஸ் நெதர்லாந்து தூதரகத்தின் அரசியல் அலுவல்கள் தொடர்பான கொள்கை அதிகாரி நாமல் பெரேரா உள்ளிட்டவர்களும் இச்சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர். (ம-7)

**தேவை**

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றிற்கு care taker வேலைக்கு ஆட்கள் தேவை.(பெண்கள் மட்டும்)
ஒரு நாளுக்கு - 2000/=
(மாதத்தில் 5 நாட்கள்) (887)

077 706 3527

**Village Hotel**
**Bus Booking** (A/C Bus)
பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு
இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
தொடர்புகளுக்கு :
www.villagehotel.lk
077 544 8503 (3456)

**காணி விற்பனைக்குண்டு**
பழைய Hari Haran Printers
அமைந்துள்ள 5½ பரப்புக் காணியும் கட்டிடமும் K.K.S Road இல் விற்பனைக்குண்டு. (3457)
தொடர்பு
076 830 3931
(Whatsapp)

**விசாக்கான (Show money)**
வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
குறைந்த சதவீதத்தில்%
•Visit visa
•Student visa
•Fixed & saving
சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு : (838)
075 033 6759

**வாடகைக்கு காணி தேவை**
யாழ். நகரில் அல்லது யாழ். நகரில் இருந்து 3Km க்கு உட்பட்ட பலாலி வீதி, கே.கே.எஸ் வீதி, பருத்தித்துறை வீதி முகப்பாகக் கொண்ட காணி/ வீடு நீண்ட கால வாடகைக்குத் தேவை. (885)
077 731 7319

WESTERN UNION MONEY TRANSFER
DHL
Ria
aramex
MMBL Money Master
Dialog
MoneyGram
Enriching Your Life
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை, Western Union மூலம் அனுப்பிய பணத்தைபெற நீண்ட கால அனுபவமும், அதிவிரைவு சேவையுடன் கூடிய நம்பகமாக சேவைகள் இவை அனைத்தையும் பாதுகாப்பு, நம்பகத்தன்மை ஒரே கூரையின் கீழ் நாடுங்கள்.
SRI MURUGAN
ஸ்ரீமுருகன்
No.303, K.K.S Road,
Jaffna, Srilanka.
(C-2346) Tel : 0094 21 222 2670 / 5392

**காணி விற்பனைக்குண்டு**
நீர்வேலிச் சந்தியில்,
அருமையான சூழலில்
7 பரப்புக் காணி உடன்
விற்பனைக்குண்டு. (3509)
074 38 25 961
076 91 97 566

**UK BUSINESS VISITOR VISA**
லண்டனில் இடம்பெறும் LONDON TAMIL MARKET
வர்த்தக கண்காட்சியில்..
உங்கள் வியாபாரத்தினை
பொருட்கள்/உள்ளூர் உற்பத்தி பொருட்கள் / சேவைகள் நீங்களே நேரடியாக சென்று சர்வதேச சந்தையில் விளம்பரப்படுத்த
✓ விசா விண்ணப்பங்கள் ✓ STALL BOOKING
✓ HOTEL BOOKING ✓ RETURN AIR TICKET
✓ பயண ஒழுங்குகள் போன்ற அனைத்து சேவைகளுக்கும்.
தொடர்புகளுக்கு
V2 TRAVELS 0777068777
(C-2347)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தா[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org